விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 10 புதன்கிழமை (23.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இடம்பெயர்ந்த மக்களைவிட குறைந்த அளவினரே மீள்குடியேற்றம்

**மிகுதி மக்கள் எங்கு எனக் கேள்வி**

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களில் சொற்பளவான மக்களே மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். அப்படியானால் மிகுதி மக்களுக்கு என்ன நடந்தது. அந்த மக்கள் எங்கே? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா உள்ளிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் தரப்பினருடனும் அரசாங்க அதிபருடனும் முரண்பட்டுக் கொண்டனர்.

இதேவேளை இறுதிப்போரில் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர் என்பதை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காண்பிக்கப்பட்ட புள்ளி விபரத் தகவலூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

20ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் உறுதிமொழிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை

**வடக்கு முதலமைச்சர் கிளிநொச்சியில் தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பல உறுதிப்பாடுகள் எவையும் இன்றுவரை நடைமுறைப்படுத் தப்படவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் ஜனாதிபதியை தான் சந்தித்த போது வழங்கப்பட்ட உறுதிப்பாடுகளே இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார். நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, சட்டத்திற்குப் புறம்பான பல நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு அரச வளங்களைப் பாவித்து ஆளுநரைத் தமது தேர்தல் கூட்டங்களில் தம் சார்பாகப் பேச வைத்து இராணுவப் பயமுறுத்தல் களை ஏற்படுத்தி அதன் மத்தியில் தான் வடமாகாண சபைத் தேர்தல் சென்ற செப்ரம்பர் மாதம் நடத்தப் பட்டது.

அப்படியிருந்தும் 38 பிரதி நிதிகளில் எம்மவர்கள் 30 பேர் மிகப் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே மகிந்த சிந்தனை உள்ளடங்கிய

19ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் மீது குற்றச்சாட்டு

(ஒஸ்லோ)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தையும், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிர மதுங்கவையும் இலங்கை அர சாங்கமே படுகொலை செய்தது என்று, நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

டுவிட்டரில் நடந்த விவாதம் ஒன்றிலேயே எரிக் சொல்ஹெய்ம் இது குறித்து தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், நீலன்

19ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் மீளிணைவுக்கு நிதி வழங்கினார் மூதாட்டி

**கைது குறித்து பொலிஸார் விளக்கம்**

(கொழும்பு)


அண்மையில் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட 64 வயதான மூதாட்டி பயங்கரவாத நடவடிக்கை களுக்கு நிதி பரிமாறுபவராக செயற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. வடக்கில் அண்மையில் ஆரம்பிக் கப்பட்ட புலிகள் மீளிணைப்புக்கே இவர் இவ்வாறு நிதியை பரிமாறியுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு கூறுகிறது.

புலம்பெயர்ந்துள்ள புலிகளிட மிருந்து வடக்கில் மீள உயிர்பெற்ற புலிகளுக்கு நிதிய்ய இவர்

20ஆம் பக்கம் பார்க்க....

## புலிகள் நாட்டில் இல்லாவிட்டால் அரசால் ஆட்சி நடத்த முடியாது

**விக்கிரமபாகு கருணாரட்ன சுட்டிக்காட்டு**



(கொழும்பு)

புலி இல்லாவிட்டால் இந்த அரசால் ஆட்சி நடத்தவே முடியாது. புலிகள் அமைப்பை உருவாக்குவதுதான் இந்த அரசின் தேவையாக இருக் கின்றது. அதற்காகத்தான் வயது வித்தியாசம் பாராமல் அப்பாவி யான மூதாட்டியையும் அச்சுறுத்தி கைது செய்கின்றது இந்த அரசு.

அரசின் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

இவ்வாறு நவ சமசமாஜக் கட்சி யின் தலைவர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரட்ன தெரிவித்தார்.

புலிக்கதை கூறி பொய்க்குற்றச்

20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் புலிகள் அழிக்கப்படவில்லை

**தேசப்பற்றுள்ள இயக்கம் தெரிவிப்பு**

(கொழும்பு)

விடுதலைப் புலி தீவிரவாதிகள் வடக்கில் முழுமையாக அழிக்கப் படவில்லை. புனர்வாழ்வு வழங் கினாலும் புலிகளின் கொள் கையை அழிக்க முடியாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

குறைந்த அளவிலான தீவிர வாதிகளே கொல்லப்பட்டனர். எனினும் இன்னும் வடக்கில் புலி கள் வாழ்கின்றனர்.

அவர்களைப் பாதுகாத்து போராட டத்திற்கு தயார்படுத்தும் செயலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்து வருகிறது.

20ஆம் பக்கம் பார்க்க....

## மேலும் ஒரு இளைஞன் ரி.ஐ.டியினரால் கைது

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு பெற்ற தமிழீழ விடு தலைப்புலிகளின் முன்னாள் உறுப் பினர்களில் மேலுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாயினைச் சேர்ந்த இராஜரட்ணம் சுதர்ஷன் (வயது 30) என்பவரே பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக் கைது நடவடிக்கை கடந்த 18ஆம் திகதியன்று கோப்பாயில் இடம் பெற்றுள்ளது.

ரி.ஐ.டியினரால் கைது செய்யப் பட்ட குறித்த நபர் யுத்தத்தின் போது

19ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு மாகாணத்தின் கல்வி மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச் சின் கல்வி மாநாடு இன்று காலை 8.30 மணியளவில் கோண்டாவில் ராஜேஸ்வரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இடம் பெறுகின்ற முதலாவது கல்வி மாநாடு இதுவென்பதால் இம் மாநாடு வடக்கின் கல்வியாளர்களிடையே பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி யுள்ளது.

இன்றும் நாளையும் இடம்பெற வுள்ள இம்மாநாட்டில் மத்திய கல்வியமைச்சர் பந்துல குணவர்த் தன, வடக்கு மாகாண முதலமைச் சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குரு குலராஜா உட்பட கல்வியமைச்சின் செயலாளர்கள், உயரதிகாரிகள் எனபலரும்கலந்துகொள்ளவுள்ளனர்.

குறித்த கல்வி மாநாடு வடக்கின் 200 வருட கல்வி பாரம்பரியத்தில் முக்கியமானதொரு கட்டமாகும்.

வடக்கு மாகாண சபை தெரிவு

20ஆம் பக்கம் பார்க்க....

சைப்பிரசில் படிக்க மாதம் ஒரு இலட்சம் வரை உழைக்க வெறும் ஐந்து இலட்சம் மட்டும் போதும்

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க, மாதம் 1 இலட்சம் வரை உழைக்க 6 பேருக்கு மட்டும் அரியவாய்ப்பு ஆண் பெண் இருபாலாரும் பறக்கலாம்.
40 வயது வரை விண்ணப்பிக்கலாம்

மொரீசியஸ் நாட்டில் படிக்க உழைக்க வெறும் ஆறு இலட்சம் மட்டும் போதும் 40 வயது வரை விண்ணப்பிக்கலாம்

(யாவும் நிபந்தனைகளுடன்)



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 4993502
www.thisaivisa.com
(C-7131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் கொரியாவின் தூதுவர் இலங்கையில்

தென் கொரிய அரசாங்கம் இலங்கைக்கான விசேட தூதுவர் ஒருவரை அனுப்பியுள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.


தென் கொரியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் யு.பையுங் ஹவான் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர் நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஷ் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, வடக்கில் தேர்தலை நடத்தியதன் ஊடாக அரசியல் மற்றும் மறுசீரமைப்புத் தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தி இருப்பதாக தென் கொரிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவினை விஸ்தரிக்கும் நோக்கில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## மரண அறிவித்தல்



சிவநெறிச்செல்வர்

### சிவ சண்முகவடிவேல்

(ஏழாலை மேற்கு, சுன்னாகம்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவநெறிச்செல்வர் சிவத்திரு சண்முகவடிவேல் 22.04.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சிவரத்தினம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், திருஞானச்செல்வம், தில்லை நடேசன், சறோஜினிதேவி, இலட்சுமிகாந்தன் சாரதாதேவி, சண்முகதாஸ் மற்றும் இலங்கை அரசாங்க ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரும், அகில இலங்கைச் சமாதான நீதிபதியும் சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளருமான சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஏழாலை மேற்கில் அவரது இல்லத்தில் (23.04.2014) இன்று புதன்கிழமை 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை மய்யானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(சி-7126)

தகவல் :
குடும்பத்தினர்.


## அற்புத சுகமளிக்கும் பெருவிழா

### இயேசு வாழ்வு தருகிறார்

இயேசுவின் தழும்புகளால் குணமானீர்கள் - 1 பேதுரு 2:24

**இடம் :**
**கட்டவேலி கரவெட்டி (வடமராட்சி)**
**மெதடிஸ் ஆலய வளாகம்**

**காலம் : ஏப்ரல் 25,26,27**
**மாலை 4.30 மணி முதல்**
**7.00 மணிவரை**

- பாவ சாபத்தில் இருந்து விடுதலை.
- பில்லி சூனிய பிசாசின் கட்டுகளில் இருந்து விடுதலை.
- கண்ணீர் கவலையில் இருந்து விடுதலை.
- குடும்பப் பிரச்சினைகளில் இருந்து விடுதலை.
- பிள்ளையில்லாத மலட்டுத் தன்மையில் இருந்து விடுதலை.

**தேவ செய்தியாளர்கள்**
Pas. சாம் (கனடா)
Pas. ஞானம் அம்புறோஸ் ( திருகோணமலை)

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்!

(சி-7180)

தொடர்புகளுக்கு
0777162084, 0776594473, 0772310503, 0777495619


## மரண அறிவித்தல்



### திருமதி கனகம்மா அருணாசலம்

### (ஓய்வுபெற்ற ஆசிரியை)

கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பாலாவி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா அருணாசலம் (21.04.2014) திங்கள் அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் அருணாசலம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான .கனகசபை தங்கம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும், ஐயம்பிள்ளை கந்தையாவின் அன்பு மருமகளும், மகேஸ்வரி (அமரர்), அருணாசலம் (அமரர்), சரவணமுத்து, பரமேஸ்வரி (அமரர்-ஆசிரிய ஆலோசகர்), திருவாதவூரர் (ஓய்வுபெற்ற காசாளர் ப.நோ.கூ.ச), மாணிக்கவாசகர் (அமரர்) அவர்களின் அன்புச் சகோதரியும், சசிகலா, சியாமளா (ஆசிரியை- கச்சாய் அ.த.க பாடசாலை), சிவசுதன் (சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலகம் கைதடி), செந்தூர்ச்செல்வன் (ஜேர்மனி), சபேசன் (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவராசா (அமரர்), சுதர்சினி, நிரஞ்சலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கஜன் (அவுஸ்திரேலியா), நகுசன் (கணிய அளவவியலாளர்), வைணவி (University of Colombo), அரவிந் (அமரர்), டினார்த்தனன் (யாழ்.இந்துக் கல்லூரி), புராந்தகி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), சபேசினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.04.2014 (வியாழன்) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பாலாவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்

(சி-7129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோகத்தர்களுக்கு சிங்கள வகுப்புக்கள்


வடமாகாண மும்மொழிப் பயிற்சி நிலையமானது வட மாகாணத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் மும்மொழி அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றது

இதன் ஒருகட்டமாக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான சிங்கள வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில்அரசநிறுவனங்களில்கடமை புரியும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க் முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை ஆளுநர் அலுவலகத்தில் பெற்று அவற்றை ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம், வடமாகாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு ஆளுநரின்செயலாளர் கேட்டுள்ளார். (2)

# ஈழத்தமிழர்களுக்கு காங்கிரஸ் செய்த துரோகத்தை நிச்சயம் பா.ஜ.க.செய்யாது

## ம.தி.மு.க.செயலாளர் வைகோ முழக்கம்



(விருதுநகர்)

**காங்கிரஸ் செய்த கொடூரமான துரோகத்தை நிச்சயமாக பா.ஜ. கட்சி செய்யாது. இலங்கைக்கு இராணுவ உதவி செய்ய மாட்டோம். ஆயுதங்களை விலைக்குக்கூட விற்க மாட்டோம் என்ற முடிவை வாஜ்பாய் பிரதமராக இருந்த காலம் வரை உறுதியாகக் கடைப்பிடித்தார். ஆயுதங்களையும் கொடுக்கவில்லை. இலங்கைக்கு ஆதரவும் வழங்கவில்லை என ம.தி.மு.க.செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.**

விருதுநகரில் இறுதிக்கட்டப் பிரசாரத்தில் அவ்மேலும்தெரிவிக்கையில்,

இனத்துக்காகவும் மொழிக்காவும் பல்வேறு துன்ப துயரங்களைத் தாங்கிப் போராடி வரும் தமிழ்த் தேசிய, தமிழீழ ஆதரவு தோழர்களை நான் என்றும் மதிக்கக் கூடியவன். அவர்களது இலட்சியம என்ன? காங்கிரஸை வீழ்த்துவது தானே! அதற்காகத்தான் நான் பா.ஜ.கட்சியுடன் கைகோர்த்துள்ளேன்.

வன்னி இறுதியுத்தத்திற்கு துணை போன காங்கிரஸை, உலகத்தால் வெல்ல முடியாத தமிழர் படை என்று போற்றப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை வீழ்த்துவதற்காக ராடாரும் இராணுவக் கருவிகளும் கொடுத்து உதவிய காங்கிரஸை, மீண்டும் ஆட்சிக்கு வரவிடக் கூடாது என்பதுதானே தமிழீழ ஆதரவாளர்களது இலட்சியம். அதனைச் செய்யும் பலம் பா.ஜ.கட்சிக்கு மட்டுமே இருக்கிறது?

இலங்கை அரசுக்கு ஆதரவாக காங்கிரஸ் அரசு இங்கு மீண்டும் மலருமானால் குற்றச்சாட்டுக்களிலிருந்து ஜனாதிபதி நிச்சயம் காப்பாற்றப்படுவார். எனவே, மத்தியில் காங்கரஸ் அரசை வைத்துக் கொண்டு ஈழத் தமிழருக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது. காங்கிரஸை வீழ்த்துவதற்கு வேறு யாரை ஆதரிக்க முடியும்?

எந்தக் கூட்டணியில் இருந்தாலும் எங்களது தனித்தன்மையை நாங்கள் விட்டுத்தர மாட்டோம்

டில்லியில் நரேந்திர மோடி முன்னிலையில் நடந்த வழக்கறிஞர்கள் மாநாட்டில் மதச்சார்பின்மை, சமூக நீதி, மனிதவுரிமையை வலியுறுத்தித்தான் நான் பேசியிருக்கிறேன்.

தோளில் போட்டுள்ள துண்டு, கடைசி வரைக்கும் கறுப்புத் துண்டாகத்தான் இருக்கும். மஞ்சளாக மாறவே மாறாது. (2)

## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வடமாகாண கல்வி வலயங்களில் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு கடமை நிறைவேற்று உதவிக்கல்விப் பணிப்பாளர்களை நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இவ்விண்ணபத்திற்கு இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 2:1 பதவிகளில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

இதற்கமைய தென்மராட்சி வலயக் கல்வி வலயத்தில் உடற்கல்வி, முறைசாராக்கல்வி, தொழில்நுட்பம் ஆகிய் பாடங்களுக்கும் யாழ்.மற்றும் மன்னார் வலயக் கல்வி வலயத்தில் ஆங்கில பாடத்திற்கும், தீவக கல்வி வலயத்தில் தமிழ், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் துணுக்காய் கல்வி வலயத்தில் விஞ்ஞானம், ஆங்கிலம், முறைசாராக் கல்வி ஆகிய பாடங்களுக்கும் மடு கல்வி வலயத்தில் தமிழ் பாடத்திற்கும் வெற்றிடங்கள் காணப்படுகிறன.

மேற்படி பாடநெறிகளின் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் தமது கல்வி வலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (2-23)

## தொழிற் பயிற்சி கற்கைகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் மேமாதம் ஆரம்பிக்கப்படவுள்ள கற்கைநெறிகளுக்கான விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன. இதன்படி இப்பயிற்சி நெறிகள் கிளிநொச்சி , ஜெயபுரம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையத்திலே நடைபெறவுள்ளன,

விவசாய உபகரணம் திருத்துநர் கற்கை நெறி கிளிநொச்சியிலும் அலுமினியம் பொரு த்துநர் கற்கை நெறி ஜெயபுரத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்பு பவர்கள் பதிவுகளை மாவட்ட காரியாலயம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, 155 ஆம் கட்டை, ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரியிலுள்ள காரியாலயத்திலோ அல்லது கிளிநொச்சி பயிற்சி நிலையத்திலோ எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்பயிற்சி நிலையத்தினால் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், கணனி வன் பொருள் தொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர், காய்ச்சி இணைப்பவர், நீர்க்குழாய் பொருத்துநர், வீட்டு மின்னிணை ப்பாளர், அழகுக்கலை வல்லுநர், சிறுவர், பெண்களுக்கான தையல்வல்லுநர் போன்ற கற்கைநெறிகள் இடம் பெற்று வருகின்றன.

இவையனைத்து கற்கை நெறிகளும் தேசிய தொழிற்றகைமை (NVQ) சான்றி தழுக்கான பயிற்சிகள் ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு 021228 5686 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகொள்ளமுடியும். (9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 80 |
| தக்காளி | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 40 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 50 | 50 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 140 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 45 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 30-50 | 60 | 100 |
| போஞ்சி | 110 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 25 | 40 | — |
| கீரை - 1 பிடி | 5-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 60-90 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 80 |

## இன்றைய இராசி பலன்

23.04.2014

(சித்திரை 10, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

நவமி முன்னிரவு 10.15 மணிவரை

திருவோணம் பிற்பகல் 3.20 மணிவரை

இராகுகாலம் 12.00-1.30 மணிவரை

சுபநேரம் 4.30-6.00 மணிவரை

நடேசரபிஷேகம்

வளவன்

**மேடம்:** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், தந்தை வழி உறவினர்களின் வருகையுண்டு, பயணங்களால் பலலுண்டு.

**மிதுனம்:** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சியில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள்.

**கடகம்:** எண்ணியது நிறைவேறும் நாள், முன்னேற்றம் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** நன்மைகள் நாடி வரும் நாள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சுமுகமாக முடியும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளால் பெருமையுண்டு.

**துலாம்:** யோகமான நாள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** பக்குவமாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும், உறவினர் வருகையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** விட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மகரம்:** வியாபார நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மன அமைதிக்காக வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், தொழிலில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் கதவை உடைத்து பொருட்கள் கொள்ளை

(கரணவாய்)

வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள், நகைகள் கொள்ளையிடப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டும் இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இத் திருட்டுச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி உடுப்பிட்டி தூவாளி வீதி இமையாணன் பகுதியில் உள்ள சனசமூக நிலைய பெண் உத்தியோகத்தரின் வீட்டில் இடம்பெற்றது.


இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவதினத்தன்று குறித்த வீட்டின் உரிமையாளர்கள் வீட்டில் இல்லாத வேளை இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் வீட்டின் கதவினை உடைத்து உள் நுழைந்தவர்கள் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கணனி, 23ஆயிரம்ரூபாபெறுமதியானதொலைக்காட்சி, 4 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 பாட்டு பெட்டிகள் மற்றும் 3 பவுண் நகைகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

வெளியில் சென்றவர்கள் வீடு திரும்பி வந்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட போதும் இதுவரை திருட்டுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை.

தொடர்ந்தும் பொலிஸார் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (2-60)



நன்றி-ஐலண்ட்




## தந்தை செல்வா நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 37 ஆவது நினைவு நாள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.தந்தை செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுதலைவர் அதி.வண.கலாநிதிஎஸ்ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து அஞ்சலியுரைகளை மௌலவி எம்.ஐ.மஹ்மூத், அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகள், நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாச்சாரியள சுவாமிகள் ஆகியோர் ஆற்றுவார்கள்.

நினைவுப் பேருரையினை ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு தந்தை செல்வா இன்றிருந்தால்.... எனும் தொனிப்பொருளில் உரையாற்றவுள்ளார். (2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு காசி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நாளை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

விசேட காலம் தவிர்ந்த ஏனைய நாட்களில் பூஜைகள் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் நடைபெறும் என ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார். (2)

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

பாணாவிடைச் சிவன் தேவஸ்தான ஜய வருட மஹோற்சவம் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

இன்று புதன்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிஷேகமும் இரவு திருக்கல்யாணமும் நடைபெறும். (2)

# பதில் தொழிலாளர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

## 71 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ். மாநகர சபையின் பதில் தொழிலாளர்கள் 71 பேருக்கும் இன்றைய தினம் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதனையடுத்து நிரந்தர நியமனம் கோரி யாழ்.மாநகர சபை சுகாதார ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டம் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென மாநகர முதலவர் மற்றும் ஆணையாளரால் வழங்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து கைவிடப்பட்டது.

யாழ்.மாநகரசபை சுகாதார ஊழியர்கள் தமகது நிரந்தர நியமனம் கோரி கடந்த 16 ஆம திகதி முதல் யாழ்.மாநகர சபை முன்றிலில் போராடடமொன்றை முன்னெடுத்து வந்தனர்.

தொடர்ந்து, நேற்றுமுன்தினம் இவர்கள் தங்கள் போராட்டத்தினை வடமாகாண ஆளுநர் அலுவலகம்முன்றிலில்முன்னெடுத்தனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களை யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் மாநகர ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, இன்று புதன்கிழமை 71 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனவும், அதற்கான அனுமதியினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளார் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த 3 நாட்கள் விடுமுறை ஆகையினால் நியமனம் வழங்கக் கிடைத்த அனுமதி தொடர்பில் அறிவித்தலினை தெரிவிக்க முடியவில்லையெனவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஊழியர்களின் போராட்டம் நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்தது.

யாழ்.மாநகர சபையில் 420 இற்கும் மேற்பட்ட சுகாதார மற்றும் வேலைப்பகுதி தொழிலாளர்கள் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களில் 180 தொழிலாளர்கள் சுகாதார தொழிலாளர்களாகக் கடமையாற்றி வருவதுடன், இவர்களில் 100 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமென மாநகர ஆணையாளர் கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் பல தடவை கூறி தம்மை ஏமாற்றி வந்ததாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர். (2-4)

# வியாபார நிலையத்தை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது

நாவாந்துறை மீன்சந்தைக்கு முன்னாலுள்ள வியாபார நிலையமொன்றினை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் அதேயிடத்தினைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளதாக யாழ்.குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வியாபார நிலையத்தின் கதவினை நேற்று முன்தினம் அதிகாலை உடைத்த திருடர்கள் அங்கிருந்த 16 ஆயிரத்து 260 ரூபா பணத்தினைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வியாபார நிலையத்தின் உரிமையாளர் யாழ்.குற்றத் தடுப்புப் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து விசாரணைகளினை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்.மார்ட்டீன் வீதியில் உள்ள வீடொன்றின் கதவு கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் உடைத்து அங்கிருந்த 3 இலட்சத்து 99 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.குற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வீட்டிலிருந்தவர்கள் ஈஸ்ரர் வழிபாட்டிற்கு தேவாலயம் சென்றிருந்த வேளை இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-4)

# யா/விக்னேஸ்வரா கல்லூரியில் உருவச்சிலைகள் திறந்து வைப்பு





யா/நெல்லியடி விக்னேஸ்வராக் கல்லூரியில் நேற்று முன்தினம் இரண்டு உருவச்சிலைகள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

கல்லூரி அதிபர் மு.கணேசலிங்கம் இந் நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

கல்லூரிக்காக ஆரம்ப காலங்களில் முன்னின்று உழைத்த வீரபாகு சிற்றம்பலத்தின் உருவச்சிலையும் சரஸ்வதி உருவச்சிலையும் திறந்து வைக்கப்பட்டன.

இவ் உருவச்சிலைகளுக்கான நிதியுதவிகளை தற்போது லண்டன் வாழ் பழைய மாணவர்கள் வழங்கியுள்ளனர்.

இதற்கமைய வீரபாகு சிற்றம்பலத்தின் உருவச்சிலையினை வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா திறந்து வைக்க, சரஸ்வதி உருவச்சிலையை பழைய மாணவியும் தற்போது லண்டனில் வாழ்பவருமான திருமதி.ஈ.இராஜேஸ்வரி திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டார். (2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இளைஞர் மாநாட்டில் 103 நாடுகள் பங்கேற்பது உறுதி

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வருகை தருவதென இதுவரை 103 இற்கும் அதிகமான நாடுகள் உறுதி செய்துள்ளன. இதில் 40 நாடுகளின் அமைச்சர்களும் அரசியல் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

103 நாடுகளை பிரதிநிதித்துவ ப்படுத்தும் இளைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளதோடு, 350 இற்கும் அதிகமான இளைஞர்கள் பல்வேறுபட்ட சிவில் சமூக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

அத்துடன் இம்முறை இலங்கையில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர்கள் மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைத் தலைவர் கலாநிதி ஜோன் வில்லியம் அஷேயும், அஹமட் அல்-ஹெண் டாவி உட்பட இன்னும் பல ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலக இளைஞர் மாநாடு 2014 மே மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதன் அங்குரார்ப்பண நிகழ்வு அம்பாந்தோட்டை, மாகம்புர ருஹுணு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

"2015 ஆம் ஆண்டு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் இளைஞர்களையும் உள்ளடக்குதல்" எனும் தொனிப்பொருளில் இம்முறை உலக இளைஞர் மாநாடு இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள 18 இற்கும் 29 வயதுக்கும் உட்பட்ட ஆயிரத்து 500 பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். இவர்களில் 350 பேர் பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டை உலகளாவிய ரீதியில் அதிகமான இளைஞர்கள் பங்குகொள்ளும் நிகழ்வாக நடத் துவதே எதிர்பார்ப்பாகும்.(2)


**பெண்களுக்கான பிரிய யோகப் பயிற்சி நிலையம்**

சனி/ஞாயிறு காலை 7-8 வரை. இல.86, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

0773960311

ஆயுாவேத முறைப்படியான சிகிச்சைகளும் வழங்கப்படும்.


# பிரித்தானிய பெண்ணை திருப்பி அனுப்ப நீதிமன்றம் உத்தரவு

புத்தரின் உருவத்தை தனது கையில் பச்சை குத்தி இலங்கை வந்த பிரித்தானிய பெண்ணை அந் நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

மிரிஹானையில் உள்ள இடை த்தங்கல் முகாமில் தடுத்து வைத்து குறித்த வெளிநாட்டு பிரஜையை பிரித்தானியாவுக்கு திருப்பி அனுப்பு மாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பிரித்தானியாவைச் சேர்ந்த நம்மி திமினி கோல்மன் என்ற பெண்ணே இவ்வாறு புத்தரின் உருவத்தை பச்சை குத்தியிருந்தார்.

இவர் தனது வலது கையின் மேற்பகுதியில் புத்தர் அமர்ந்திருக்கும் உருவத்தை பச்சை குத்தி வந்த போது, கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மும்பையிலிருந்து ஜி.எம். 256 இலக்க விமானத்தில் இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர் திரு. சங்கரப்பிள்ளை திரவியராசா

எமது விளையாட்டுக்கழக ஆரம்பகால வீரரும் கலைவாணி சனசமூக நிலையத்தின் உறுப்பினருமாகிய உயர்.திரு. சங்கரப்பிள்ளை திரவியராசா அவர்கள் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளதை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அருணோதயா விளையாட்டுக்கழகமும்
கலைவாணி சனசமூக நிலையமும்
ஆழியவளை.

(6195)

# நன்றி நவிலல்

எனது பெற்றோர் அமரர்கள் இராசையா சரஸ்வதி, நினைவாக யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நான்கு பரப்புக் காணியும் நான்கு வகுப்பறைக் கட்டடத் தொகுதியும் அமைத்து அதற்கு இராசையா சரஸ்வதி மண்டபம் என பெயர் சூட்ட சந்தர்ப்பம் வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினருக்கு முதற்கண் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் 06.04.2014 அன்று நடைபெற்ற கட்டடத் திறப்பு விழாவிற்கு என்னையும் எனது குடும்பத்தினரையும் அழைத்து கௌரவப்படுத்திய கல்விசார் அறிஞர்கள், சமயத் தலைவர்கள், பெரியோர்கள், சமூக ஆர்வலர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எனது சேவையைப் பாராட்டி ***இராஜகிரீடம்*** சூட்டிய பாடசாலை அதிபர் திரு.சண்.வாமதேவன் அவர்களுக்கும் மற்றும் அவருடன் இணைந்த ஆசிரியர், மாணவர் சமூகத்தினருக்கும் ***செங்கைப் புரவோன்*** எனும் பட்டம் வழங்கி கௌரவித்த யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி.மாணிக்கராசா அவர்களுக்கும்

மேலும் என்னைப் பாராட்டிப் பேசி, பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி, மலர் மாலை அணிவித்து வாழ்த்தி வணங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் சார்பாகவும் என் குடும்பத்தினர் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் 09.04.2014 அன்று எனது மணி விழாவினை கருணாலய இல்லச் சிறுவர்களுடன் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித்தந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் வாழ்த்துரை, வாழ்த்துப்பா, மலர்மாலை அணிவித்து வாழ்த்தியவர்களுக்கும் பத்திரிகை, கடிதம் மூலம் வாழ்த்திய அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இராசையா சரஸ்வதி குடும்பத்தினரும்**
**இராசையா குவேந்திரநாதன் குடும்பத்தினரும்**
**ராஜா பிளாசா,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(6196)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 40.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSc / பொறியியலாளர்<br>தொ.இ: B/1356 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 36<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, Pharmacy Course / ஆசிரியர்<br>தொ.இ: G/1926 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 33.75<br>தகைமை/தொழில்: A/L / அரச போக்குவரத்து நடத்துநர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மிகமுக்கியம்<br>தொ.இ: B/1357 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 42.25<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: CIMA, MBS – Following (UK)<br>தொ.இ: G/1930 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 36.5 சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, Civil Engineering, Q.S / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2405 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 20<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc / Civil Engineer<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/1931 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 26.5<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L (கனடா)<br>தொ.இ: B/2813 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 35<br>உயரம்: 4'7"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/1932 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் செம்மலை கிராமம்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள செம்மலைக் கிராமம் அடிப்படை வசதிகள் பலவற்றில் பின்னடைவாகவுள்ளதென கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த கிராமம் யுத்தத்தினால் 5 தடவைகள் இடப் பெயர்வை சந்தித்திருந்தது.

இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2 ஆம் திகதி மீள்குடியேற்றப்பட்டு 326 குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வருகின்றன.

எனினும் நிரந்தர வீட்டுத் திட்டம் எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. யுத்தத்தினால் 58 வீடுகள் முழுமையான சேதத்திற்கும் 268 வீடுகள் பகுதிச் சேதத்திற்கும் உட்பட்டிருந்தன.

இவற்றில் பகுதிச்சேத வீடுகளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் 251 வீடுகளும் யு.என்.கபிராற் நிறுவனத்தினால் 6 வீடுகளும் புனரமைத்து கொடுக்கப்பட்டுள்ள போதிலும் 11 வீடுகள் புனரமைக்கப்படாமலேயே உள்ளன.

அத்தோடு 31 தற்காலிக வீடுகளை அக்ரட் நிறுவனம் வழங்கியுள்ளது.

22 தற்காலிக வீடுகள் இன்னமும் தேவையாகவுள்ளன.

அடிப்படை வசதிகளின்படி 75 குடும் பங்கள் கிணறுகளின்றியும் 45 குடும்பங்கள் மலசலகூட வசதிகளின்றியும் 30 குடும்பங்கள் குடிநீர் இன்றியும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றன.



இங்குள்ளவர்களில் 112 பேருக்கு மாத்திரமே சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் 75 பேருக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

கிராமத்தின் 26 வீதிகளும் குண்டும் குழியுமாகவும் கிரவலாகவுமுள்ளது. மின்சாரம் 310இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு கிடைக்கவில்லை.

இக் கிராமத்திலுள்ள 25 கடற்றொழிலாளர்களுக்கு படகுகள், வலைகள் என்பன வழங்கப்படவில்லை.

கிராமத்தின் முக்கிய அலுவலகங்களுக்கு காணிகள் உள்ளபோதிலும் நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்படவில்லை.

காணிகளின்றி 120 பேர் உள்ளனர்.

இந் நிலையில் வீட்டுத்திட்டங்கள் அவர்களுக்கு கிடைக்காமல் போகும் நிலை உருவாகியுள்ளதென மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, குறித்த கிராமத்தினை அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்டோர் முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ளள(9-267)

# கவிதைநூல் வெளியீடு

(துணுக்காய்)


வன்னியூர் செந்தூரனின் **உயிர் வலித்த கணம்** கவிதை நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிளி.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் சு.லோகேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வெளியீட்டுரையை கிளி.மத்திய கல்லூரி அதிபர் மு.ர்வீந்திரன் ஆற்ற, நயப்புரையை சமரபாகு சீனா உதயகுமார் ஆற்றுவார்.

நூல் விமர்சனத்தை துணுக்காய் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரிபுத்திரி கிருபாகரன் ஆற்றுவார். (அ)




# குளங்கள் வற்றியதால் கால்நடைகள் பரிதவிப்பு





பூநகரி பிரதேசத்தில் இதுவரை கால் நடைகளுக்கு கோடை காலத்தில் நீர் பருகக் கூடிய நிலையில் இருந்த பெரும்பாலான குளங்கள் வரட்சியின் கோரத்தாண்டவத்தினால் நீர் எதுவும் இல்லாத நிலையில் பொருக்கு வெடித்து புழுதி பறக்கும் நிலை தோன்றியுள்ளது.

இங்குள் பெரிய குளங்களான கொக்குட்டயான், மானாப்பு, புதுக்குளம், ஆனைப்பாப் பான்குளம், சோபாலபிட்டிகுளம், நெடுங்குளம், தாளக்குளம் போன்றவற்றிலும் நீரின்றியுள்ளதனால் பல ஆயிரக்கணக்கான கால்நடைகள் நீர் நிலைகளைத் தேடி சத்த மிட்ட வண்ணம் அலைந்து திரிவது மனதை உருக்குகின்றது.

தற்போது வற்றிப் போயுள்ள ஊற்று உள்ள நீர் நிலைகளை இனங்கண்டு கமக்கார அமைப்புக்களோ, சம்பந்தப்பட்ட அலுவலர்களோ அவற்றை ஆழப்படுத்துவற்கான நடவடிக்கை எடுக்கத் தவறின் கால்நடைகளை அழிவில் இருந்து பாதுகாக்க முடியாமற் போகும் என பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (9-84)

# பொது நோக்கு மண்டபத்தை அமையுங்கள்

(முல்லைத்தீவு)

கேப்பாப்பிலவு கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இக் கிராமத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

இந் நிலையில் பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்படாமையினால் கூட்டங்களையோ, பொது நிகழ்வுகளையோ நடத்துவதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்காக 1/2 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ள போதும் கட்டடம் அமைக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்டோர் குறித்த காணியில் பொதுநோக்கு மண்டபத்தை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

# முன்பள்ளி சிறார்களுக்கு பால்மா பைக்கற்றுக்கள்



(குருன்காடு)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 16 முன்பள்ளிகளைச் சேர்ந்த 700 சிறுவர்களுக்கு பால்மா பைக்கற்றுக்களை வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கி வைத்தார்.

இதேவேளை, மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

குறிப்பாக வீதி, மின்சாரம், குடிநீர், போக்கு வரத்து உள்ளிட்ட பிரச்சினைகள் காணப்படுவதாக அக் கிராம மக்கள் தன்னிடம் முறையிட்டுள்ளதாகவும் இவர் களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார். (9-256)




வட்டு.இந்து வாலிபர் சங்கத்தினரால் முல்லைத்தீவு அன்பு சிறுவர் இல்ல மாணவர்களின் பயன்பாட்டிற்கென மூன்று துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி நாகரெத்தினாம்பாள் தியாகராசா



தோற்றம்
25.07.1933

மறைவு
04.05.2013

திதி: அபரபக்க நவமி



அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் எம் வாழ்வில் ஒளிமயமாக விளங்கிய எமது குல விளக்கே எம்மை விட்டு நீங்கி ஒரு வருட காலமாகின்றது. நீங்கள் எமது இதயங்களில் குருதியாக பாய்ந்து கொண்டிருக்கின் றீர்கள். எமது குடும்ப நலனை பாதுகாக்க குலதெய்வமாக விளங்கும் ஞான செல்வ விநாயகரை ஆசியுங்கள்.

(6185)

25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துன்பத்தைக் கண்டு துவண்டு போகாத 07 7ஆம் எண்காரர்களின் குணாதிசயங்கள்

7,16,25 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

இந்த எண்காரர்களுக்கு பெயரும் புகழும் கிடைத்தாலும் தாம்பத்திய வாழ்வில் பிரச்சினைகளை சுமந்து கொண்டுதான் வாழ்வார்கள்.

சுற்றுப்புற சூழ் நிலைகளினால் அதிகம் பாதிக்கப்படுகிறவர்கள் இந்த எண்காரர்கள் தான்.

இவர்கள் எவரிடமாவது கடன் வாங்கினால் அந்தக் கடனை விரைவில் எப்படியாவது அடைத்து விட வேண்டும் என்று நேர்மையான குணம் கொண்டவர்களாக இருப்பார்கள். சிலருக்கு அது முடியாமல் போய் விடுவதும் உண்டு.

இவர்களின் மனதிற்குப் பிடித்த எந்த வேலையாக இருந்தாலும் மனச்சாட்சியுடன் அதைச் செய்வார்கள். இவர்களை பற்றிய முக்கியமான, ஒரு விடயம் என்னவென்றால், இவர்களுக்கு உடல் வலிமையைக் காட்டிலும் மன வலிமைதான் நிறையவே இருக்கும். ஆனால் இதைப் புரிந்து கொள்ளாத ஒரு சிலர், தங்கள் உடல் பலத்திற்கு அதிகமாகவே வேலை செய்வதினால், உடல் பலவீனம் அடையும் சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கும்.

பிடிவாதக் குணம் கொண்ட இவர்கள் தாங்கள் செய்கின்ற வேலைகள் எல்லாம் எவ்விதசிக்கலும் இன்றி நடந்து கொண்டிருந்தால் மகிழ்ச்சி யோடு இருக்கும் அதே நேரம் எங்காவது ஒரு சிறு தவறு நடந்து அவை தடைப்பட்டுவிட்டால் உடனே மனச் சோர்வடைந்து விடுவார்கள்.

இந்த எண்கார ஆண்கள் மிகவும் அமைதியானவர்களாக இருப்பார்கள்.

ஆனால் இந்த எண்கார சில பெண்கள் இதற்கு மாறுபட்டவர்களாகவே இருப்பார்கள். ஆண்களை அடக்கி ஆள்வதில் திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள்.

வீட்டில் இவர்களின் அதிகாரம் தான் கொடி கட்டிப்பறக்கும். கணவனை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வார்கள். அவர்களும் இவர்களுக்கு பயந்தவர்களாக இருப்பார்கள்.

இந்த எண்காரர்களில் பெரும்பாலானோர் சாதாரண குடும்பத்




தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனாலும் தாங்கள் பெரிய குடும்பத்தில் பிறந்தவர்கள் என்று காட்டிக் கொள்வதற்கு மிகவும் முயற்சி செய்வார்கள்.

இவர்களுக்கு பெயரும், புகழும் வசதி வாய்ப்புகளும் இருந்தாலும் தாம்பத்திய வாழ்க்கை திருப்திகரமாக அமையும் வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும்.

இவர்களின் உடலில் ஏதாவது ஒரு நோய் ஒளிந்து கொண்டிருக்கும். அங்கவீனர்களாக இருப்பவர்கள் அநேகமான இந்த எண்காரர்களாகத் தான் இருப்பார்கள்.

சுதந்திரமான எண்ணம் கொண்ட இந்த எண்காரர்களின் தனித்துவம் பல இடங்களில் பளிச்சிடும்.

2,11,20,29, போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்காரர்களின் வாழ்வில் அடிக்கடி குறுக்கிடுவார்கள். இந்த எண்காரர்களைத் திருமணம் செய்து கொண்டால் தான் 7 ஆம் எண்காரர்களின் வாழ்வில் ஓரளவாவது நிம்மதி கிடைக்கும்.

மதத்தைப் பற்றிய இவர்களுடைய கருத்துக்கள் கொஞ்சம் வித்தியாசமாகவே இருக்கும். வழக்கமான பாதையில் செல்வது என்பது இவர்களுக்குப் பிடிக்காது.

இந்த எண்கார சில பெண்களுக்கு கொஞ்சம் வசதியான இடத்தில் திருமணம் நடக்கும் வாழ்க்கையில் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற அக்கறையே ஒரு சிலருக்கு இருக்காது. ஏதோ பிறந்து விட்டோமே என்று வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

அதிர்ஷ்டமான பெயர் மாற்றத்தின் மூலம் தான் இதை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

இந்த எண்காரர்கள் 8, 3, 4,1 எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளவே கூடாது. இவை எல்லாம் ஜென்மப்பகையான எண்கள். 7 ஆம் எண்காரர்களுக்கும் 4ஆம் எண்காரர்களுக்கும் இடையில் ஒரு வித காந்தசக்தி இருக்கும். பார்த்த உடனேயே ஒருவரை ஒருவர் கவர்ந்து விடுவார்கள். ஆனால் திருமணம் செய்து கொண்டால் அந்தக் கவர்ச்சி கழுத்தறுப்பாகிவிடும்.

உழைப்பின் மூலம் தான் செல்வம் சேர்க்க முடியும் என்ற நம்பிக்கை கொண்ட இவர்கள் நல்ல உழைப்பாளிகளாக இருப்பார்கள். இதனால் எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து கொண்டிருப்பார்கள்.

வெளிநாடுகளில் அதிகம் வேலை பார்ப்பவர்கள் இந்த எண்காரர்கள் தான். ஒருவரது பிறந்த திகதியில் எந்த இடத்தில் (பிறப்பு, வளர்ப்பு, பொறுப்பு, விதிஎண் 7 இருந்தாலும் அவர்களுக்கு கண்டிப்பாக வெளிநாட்டுப் பயணம் உண்டு. பிரயாணம் செய்வது என்றால் இவர்களுக்கு அலாதிப் பிரியம் உண்டு.

இந்த எண்காரர்களில் பலர் பேரறிஞர்களாகவோ, சிறந்த நடிகராகவோ, பெரிய மேதைகளாகவோ பிரகாசிப்பார்கள். சுயநலமில்லாத எந்தக் காரியத்திலும் இவர்கள் ஈடுபட்டால் அதில் வெற்றிபெற்று நல்ல புகழும் பெறுவார்கள். இந்த எண்காரர்களுக்கு மனதிற்கிசைந்த துணை கிடைப்பது என்பது அபூர்வம் தான்.


விதி எண்ணும் பெயர் எண்ணும் சிறப்பாக இருக்குமானால் நல்ல குடும்ப வாழ்க்கை அமையலாம். இவர்கள் குடும்ப வாழ்வில் இருந்தாலும் துறவறம் பூண்டவர்களைப் போல்தான் இருப்பார்கள். குறிப்பாக ஆண்கள்.

இவர்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சாதாரண விடயங்களில் கூட இவர்களது முயற்சிகள் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத முறையில் அது தள்ளிப் போகும் அல்லது தட்டிப் போகும்.


பொதுவாக இந்த எண்காரர்கள் அதீத சக்தியைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

துன்பத்தைக் கண்டு துவண்டு போகாத இவர்கள் வாழ்க்கைப் பயணத்தில் போராடிக் கொண்டே இருப்பார்கள். இந்த எண்ணைப் பற்றி முக்கியமானஒருவிடயத்தைச்சொல்ல வேண்டும்.

7 ஆம் எண் என்னதான் பிரச்சினை மிகுந்த எண்ணாக இருந்தாலும் அதிர்ஷ்ட எண்ணுக்கு அதாவது அந்த எண்ணைக் கட்டுப்படுத்தக் கூடிய எண்ணுக்கு பெயரை அமைத்துக்கொண்டு அட்டவணைப்படி எழுதி வந்தால் துன்பங்கள் தூளாகும். துயரங்கள் தூரப் போகும். வசந்தம் வாசலில் காத்திருக்கும். அதிர்ஷ்டம் அரவணைத்துக் கொள்ளும்.



வீட்டுவாசல் வெளிப்பக்கம் பார்வைக்கு லட்சுமி, குபேரன், பெருமாள் படங்களை தொங்க விடுவது நல்லது என்று யாராவது கூறினால், உடனே அப்படிச் செய்யாதீர்கள். அது பிழை வீட்டின் முன் அறையில் உள்ப் பக்கம் பார்த்து கதவுக்குப் பின்னாலோ நேர் எதிர் சுவரிலோ வாசலைப் பார்த்தோ தான் அந்த மாதிரி படங்களைத் தொங்க விட வேண்டும். அப்படிச் செய்தால் "பணவரவு" அதிகரிக்கும்.




## சித்த மருத்துவ அடிப்படையில் நீரின் உபயோகங்களும் சுகாதாரமும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஏரி:- ஏரி என்பது குணங்களிற் குளத்தையொத்தது. ஏரியைப் பெரிய குளமென்றே கூறலாம். எப்பொழுதும் அதில் நீர் தங்கியிருந்தாலும் மழைநீர் அதில் வந்து விழுங்காலத்தில் அது தன்னுடன் பல மலினங்களைச் சேர்த்தடித்துக் கொண்டு வர வசதியிருந்தாலும் ஏரி நீர் சுத்தமாய் இருத்தற்கு இயலாது. தவிரவும் இயற்கையாகவே ஏரிநீர் துவர்ப்பாயிருப்பதால் வாதத்தை விருத்தி செய்யும்.

ஆயினும்ஏரிநீரை அறவேநீக்கவும் கூடாது. ஏனெனில் குளத்தைவிட ஏரி நீரின் அளவு அதிகமாயிருத்தலால் அதில் குளத்து நீரில் இருப்பதைக் காட்டிலும் அதிகமான மலினங்கள் இராது. இருக்கும் மலினங்களும் கீழ்த்தங்கி நீர் தெளிவடையக்கூடும். ஊற்றுநீர், ஆழ்ந்த கிணற்று நீர், மாறுபடும் குளத்து நீர் முதலிய நீர்களைப் போல ஏரிநீர் அவ்வளவு சுத்தமானதன்றாயினும் மாறாக் குளத்து நீரை விட ஏரி நீர் சிறந்தது. ஏரி நீரைஉபயோகிக்கும் காலத்தில் காய்ச்சி, வடிகட்டி, அதிலுள்ள துவர்ப்பு நீங்கும் பொருட்டும் நெல்லிக் கட்டை, தேற்றாங் கொட்டை முதலியன இட்டுப் பயன்படுத்தலாம்.

ஓடை நீர்: ஓடைநீரால் அதிதாகம், தோள்வன்மை இவை உண்டாகும். இது துவர்ப்பும் இனிப்பும் பொருந்தியது. இந்நீர் எப்போதும் ஓடிக் கொண்டே இருப்பதனால் இது உபயோகத்திற்காகும்.

ஊற்றுள்ள ஓடையில் ஊறும் நீர் அருந்துவதற்குமாகும். இதனை,

... பருத்த ஓடைத் தெளியூறல்
நேசித்திடவே பணி யில்லை...
என்பதால் அறிக

இவ்வாறே சுனைநீர், பாறைநீர், கரும்பாறை நீர், அருவிநீர், அட்வி நீர், கறுத்த நீர், சிலந்தி நீர், வயல்நீர் என்பனவற்றின் பற்பல மருத்துவ குணங்கள் வேறுபட்டுக் கூறப்படுகின்றது.

அன்றியும் அருவிநீர் மேக நோயை நீக்கும், கபத்தை பிறப்பித்தாலும் இரத்த பித்தத்தை நீக்கும். மிகுந்த பலத்தைக் கொடுக்கும்.

முக்கியமாக வயல்நீர்

நெற்கழனிகள் சூழ்ந்த வயல்களிலுள்ள கிணற்றுநீரால் மேகநோய், தாகம், மேகவெட்டை, சுரம் இவை போகும். தேகம் குளிர்ச்சியடையும். அன்றியும் வன்மையுறும். இரத்தகயம், மார்பு நோய், இவை தணியும்.

இதனை, மேகம் போம் தாகம்
போம் வெட்டையுடனே சுரம் போம்
தேகங் குளிர்ச்சியுற்றுத் தேறுங்
காண்- சோகமெல்லாம்
ஆறு மிரத்தகய மார்புநோய்
கோலமிக
மாறும் வயற்புனற்கு [illegible]
என்பதால் அறிக.

இவையாவும் நிலவியல்புள்ள நீரும் அதன் குணங்களும்.

**மலின நீரின் இயற்கைச் சுத்தி**

நீரிற் கரைந்திருக்கும் சாதாரண வாயு ஒரு விதத்தில் நன்மை செய்கிறது. எப்படியெனில் நீரில் விழும் இலைகளிலுள்ள சாரங்களைப் பிரித்து அதை நீரிற் சேர்க்கின்றது. இதில் சில நன்மை தரக்கூடியன. செடி, கொடிகளிலுள்ள சில உப்புக்கள் நீருக்கு நன்மை தருவனவாகும். ஆயினும் சில நீர்களிலுள்ள சுண்ணாம்புச் சத்துக்கள், இந்நீரை அருந்துபவர்களுக்கு சலக்கடுப்பு, கல்லடைப்பு முதலிய ரோகங்களை உண்டாக்கும் அன்றியும் கழலை நோயைப் பிறப்பிக்கும்.

நீரில் வளரும் மீன்கள் பாசிகளையும் சில கிருமிகளையும் கொசுமுட்டை முதலிய மலினங்களையும் புசித்து நீரைப்புனிதப்படுத்துகின்றது. ஆகையால் சில வகை சிறுமீன்களை கிணறு, குளம் முதலிய நீர்நிலைகளில் விட்டு வளர்க்கலாம்.

சூரிய, சந்திர கிரகணங்கள் நீரில் ஊடுருவிப் பாய்வதால் பெரும் பாலான மலினங்கள் நீங்குகின்றன. பாசி, அல்லி, தாமரை முதலியன சந்திர, சூரிய கிரகணங்கள் ஊடுருவிச் செல்வதைத் தடுக்கின்றன.

ஆற்றுநீரில் மலினங்கள் அதிகம் [illegible] யாகவே எப்போதும் [illegible] ருத்தலால் இந்நீரின் ஒவ்வொரு துளியும் சூரிய சந்திர கிரகணங்களாலும் காற்றாலும் தாக்கப்பட்டு புனிதமடைகின்றன. அன்றியும் இதில் மிதக்கும் மலினங்கள் இரு கரைகளிலும் ஒதுக்கப்படுகின்றன. மற்றக்கனமான மலினங்களும் அடியிற் படிந்துவிட இயலும். ஆனால் காட்டாற்று நீரில் காடுகளில் அதிக மரங்கள் அடர்ந்திருத்தலால் சூரிய, சந்திர கிரகணங்கள் தடைப்படுவதோடு உதிர்ந்த இலை போன்ற மலினங்களும் அதில் சேர வாய்ப்புண்டு.

ஊற்று நீரில் இவ்வித மலினம் இல்லை. ஆனால் உப்புக் கரைந்திருக்கக்கூடும். அப்படியிருப்பின் அந்நீர் பயனற்றது. இனிப்பாக இருக்கும் ஊற்றுநீரே தேகாரோக்கியத்திற்கு உகந்தது.

**இம்மலின நீரின் செயற்கை சுத்தி**

தெளிய வைத்து வடிகட்டி பயன்படுத்தல்- நீரைக்கொதிக்க வைப்பதால் வாயு வெளியாகும். சில உப்புக்கள் சுண்ணாம்புச் சத்துக்கள் கீழ்படியும். அன்றியும் கிருமிகளும்அலைகளின் முட்டைகளும் மடியும்.

கடல்நீர் போன்றவைகளை வாலையிலிட்டு ஆவி ஆக்கியே புனிதப்படுத்த முடியும். கப்பலில் செல்லும் பிரயாணிகளுக்கு இம்முறையினால் நீர் கிடைக்கிறது.

**நீரைத் தெளியவைக்கும் உபாயங்கள்**

தேற்றாங் கொட்டையாகி தெளியவைத்தல்

...மண் மயக்கந் தோற்றுவித்தால் மாற்றுதல் போல்...

நன்றாக வடிகட்டிய நீரை ஒரு தூய சட்டியிலிட்டு 4,5 தேற்றாங் கொட்டையை அதில் இழைத்துப்போட்டு 5 அல்லது 6 மணிநேரம் அசையாது வைத்திருக்கவும். நீரிலுள்ள நுண்ணிய மலினங்கள் சட்டியின் கீழ்தங்கும். மேலுள்ள நீர் தெளிந்திருக்கும். இம்முறையால் நீரிற்கு ஒருவித இனிப்புச் சுவையும் உண்டாகும்.

இவை அல்லாமல் நன்றாக பழுத்த நெல்லிக் கனியையேனும் அல்லது நெல்லிக் கட்டையேனும் நீரில் போட்டு வைப்பதும் சிறந்தது. இதனால் நீர் தெளியும். நீருக்கு சிறிது புளிப்பு இனிப்பு கலந்த சுவையுமுண்டாகும்.

கடுக்காய் , நெல்லி,தான்றி போன்ற மரங்களை ஏரியோ கிணறோ ஆறோ இவற்றினருகில் அல்லது இவற்றை சுற்றி வளர்க்கலாம்.

அன்றியும் மேற்கூறிய முறைகளில் பயன்படுத்தும் நீர்களை அருந்தும்போதுகூட சித்தமருத்து வத்தில் சில ஆரோக்கிய முறைகள் கூறப்பட்டுள்ளன. கருந்துள சியிலை, மிளகு, சீரகம், வில்வமிலை போன்ற வற்றை போட்டு ஊறிய நீர்களை அருந்துதல் பற்றியும் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. (முற்றும்)

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...தேவர்கள் பேச்சைக்கேட்டு சித் தர்கள் நிதானித்தனர்.

"சரி, சபித்துவிட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டீர்கள். இனி அதனை மாற்ற இயலாது. ஆனால் அந்தச் சாபத் தினால் நாங்களிருவரும் இப்பெண் களை அடையும்படியான சாபமாகக் கொடுங்கள்" என்று தேவர்கள் வேண் டிக் கொண்டனர்.

தேவர்களே! எங்களது சாபத்தில் நீங்களும் சேர்வதுதான் சரியான தீர் வாக அமையும். நீங்கள் இருவரும் இறுதி வரை அவர்களுடன் சேர்ந்தே இருக் கும்படியாகச் சபிக்கிறோம்.

மருள் மாயையின் கையைக் கோரக் கரும், இருள் மாயையின் கையைப் பிரம்ம முனிவரும் பற்றிக் கொண்டு சாப மந்திர உச்சாடனம் செய்து தங் கள் கையிலிருந்த தீர்த்தத்தை அவர் கள் மீது தெளிக்க அந்த இரண்டு பெண்களும் இரண்டு மூலிகைச் செடி களாக மாறி நின்றனர்.

இக் காட்சியைப் பார்த்திருந்த தேவர் களும் முனிவர்களும் பிரம்ம முனிவர் கைப்பற்றி நின்ற செடிக்கு 'பிரம்ம பத்திர'மென்றும் அதாவது யாகப் புகை யிருந்து உண்டானதால் 'புகையிலை" என்றும் கோரக்கர் கைப்பற்றி நிற் கின்ற செடிக்கு "கோரக்கர் மூலிகை" என்றும் அதாவது அது புசிப்பவர்க ளுக்கு அமுதமாயிருத்தல் பற்றி 'கஞ்சா" என்றும் பெயரிட்டு, இவ்விரு பொருட் களும் தண்ணீர், நெருப்பு இல்லா விட்டால் சுவைக்காது அல்லவா? ஆத லால் வருண பகவானும், அக்கினி பக வானும் எக்காலமும் சேர்ந்தே இருப் பீர்களாக" என்று கூறினர்.

இருவரின் சாபப்படியே புகையிலை சிகரெட்டு, சுருட்டு முதலான வடிவங் களுடன் நெருப்புடன் இணைந்து மானி



நாகக்கன்னி கோயில்

டர்களுக்குப் போதை இன்பம் தரு கிறது. சில சமயங்களில் நீருடன் இணை ந்து (உமிழ் நீருடன் கலந்து) லாகிரி வஸ்துவாகவும் இன்பம் தருகிறது.

கஞ்சாவையும் வருணனுடன் சேர் ந்து (நீருடன் சேர்த்து) போதைப் பொரு ளாகவும், அக்னியுடன் சேர்ந்து (நெருப் புடன் இணைந்து) புகைக்கும் வஸ்தாக வும் இன்பம் தருகிறது.

கயிலையிலிருந்த சிவபெருமான் சதுரகிரியில் நடந்த இக்காட்சியைக் கண் டதும் உமையிடம் நாம் எண்ணிய படியே நீ அனுப்பி இரு மாயப் பெண்களும் காய கற்ப மூலிகைச் செடிகளாகி விட் டனர். ஆகையால் நாம் இருவரும் இப் போதே சதுரகிரி சென்று சித்தர்களை மகிழ்விக்க வேண்டும் என்று கூறி உமா தேவியோடு ரிஷப வாகனத்தில் யாக சாலையில் எழுந்தருளினார்.

முனிவர்களே! நீங்கள் யாகம் செய் கின்ற காரணத்தை நாம் அறிவோம். அதில் நீங்கள் கோரியபடி பஞ்ச கிருத்

## ஆன்மீகம் 100

தியங்களை நீங்களே நிகழ்த்தல் என் பது இயலாத காரியம். உங்கள் யாகத் திற்கு அதற்கான வலிமையும் கிடை யாது. இருந்தாலும் மிகுந்த சிரத்தை யோடு இந்த யாகத்தை நீங்கள் இரு வரும் இதுநாள்வரை செய்து வந்த தற்கு மகிழ்ந்து உங்களுக்கு வரம் ஒன்று அளிக்கின்றோம். இந்தச் சதுரகிரி மலையில் அகால மரணமடைந்தவர்க ளைப் பிழைக்கும் படி செய்யும் ஆற் றல் உங்களுக்கு உண்டாகும் என்று கூறி அனைவரையும் ஆசீர்வதித்து மறைந்தனர்.

அன்று முதல் கோரக்க நாதர் வர்க் கத்தார் கஞ்சாவையும், பிரம்ம முனி வர் வர்க்கத்தார் புகையிலையையும் கற்ப மூலிகைகளாகப் புசித்து வருகிறார்க ளாம்.

தேவலோகத்திலிருந்து மோகினி போல் தோன்றி சித்தர்களின் சாபத்தி னால் மூலிகைச் செடிகளாக மாறி நின்ற இடம்தான் இந்த மோகினிப் பாறை என்று கதையைக் கூறி முடித்தார் அந் தத் துறவி.

இப்பொழுது அந்த மோகினிப்பாறை வெறும் கல்வெளியாய் தோன்ற வில்லை. ஏதோ ஒரு வரலாற்று நினை விடம் போலவே காட்சி தந்தது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

19

....முகம்- எத்தனை பெரிய அசௌகரியம்?

திரு.வி.க.பூங்காவில் அமர்ந்து கொண்டு சிறுநீர் கழிக்கச் சிரமப்படும் போதுதான் முகம் ஒரு தொந்தரவு என்று தோன்றும் எனக்கு.

ஆனால் உங்களுக்கு....

உங்கள் முடிபு நன்று.

நீங்கள் முகம் மறைத்தது எத்தனை பெரிய சௌகரியம்!

டிக்கெட் வரிசையில் நீங்களே நிற்கலாம்.

வண்டி வரத்தாமதமானால் வேர்க் கடலை கொறித்துக் கொண்டே பொடி நடையாய்ப் போய்ச் சேரலாம்.

பேருந்தில் ஒரு பரமசிவத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இன் றைய அரசியல் பற்றி இலவசத் தக வல் பெறலாம்.

சாலைகளையும் மனிதர்களையும் வசதியாய் வாசிக்கலாம்.


முகம் மறைப்பது எத்தனை பெரிய சௌகரியம்!

முகத்தைத் தான் மூடிக் கொண்டீர் கள். மூளையை- கண்களை- காது களை- எப்போதும் திறந்து வைத்துக் கொண்டீர்கள்.

இன்னொரு முறை இப்படியொரு சாதனை எவரேனும் நிகழ்த்த முடி யுமா என்று நிமிர வைத்ததே உங்கள் சாதனை.

பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ இந்திய வாழ்க்கையில் காலையில் மனைவிகள் முகத்திலேயே விழித் தாக வேண்டிய கணவர்கள் மாதிரி- தமிழ்நாட்டு வாழ்க்கையில் பலருக் குக் குமுதம் வெள்ளிக்கிழமை சம் சாரமாய் ஆகிவிட்டது.

ஆறுவார இடைவெளிகளுக்குள் ஒருவருடைய பெயர் ஒருமுறையாவது குமுதத்தில் உச்சரிக்கப்படாவிட்டால், உங்கள் கணக்கில் அவன் இல்லாவிட் டால் நாட்டுக்கு ஒன்றும் நஷ்டமில்லை என்று அர்த்தம். அதாவது அவன் இரு



## எஸ்.ஏ.பி.அண்ணாமலை

ந்து கொண்டே இறந்துவிட்டான் என்று அர்த்தம்.

மரணத்துக்குப் பிறகும் ஒருவன் பெயர் உங்கள் பத்திரிகையில் உச்சரிக் கப்பட்டால் அவன் இறந்தும் இருந்து கொண்டிருக்கிறான் என்று அர்த்தம்.

நிகழ்கால நிமிடங்களில் இருப்ப வர்கள்- இருப்பவைகள் இவைகளே உங்களின் எழுது பொருட்கள்.

இது இன்று நேற்று எடுக்கப்பட்ட முடிவன்று.

இந்தியாவுக்குச் சுதந்திரம் விடிந்த நான்காவது மாதத்தின் எந்த நிமிடத் தில் குமுதம் கடற்கரையில் கருவாகி, குதிரை லாயத்தில் உருவானதோ அப் போதே எடுக்கப்பட்ட முடிபு இது.

"எரியும் நிமிடங்களே எங்களின் முதலீடு."

குமுதம் மாதமிருமுறையாய் இதழ் விரித்தபோதே "சென்னை யாருக்குச் சொந்தம்?" "உலகப் போர் வருமா?" என்ற அக்கினி வினாக்களிலேதான் ஆரம்பித் தீர்கள்.

உங்களுக்குத் தன்னம்பிக்கை மிகுதி; தைரியம் மிகுதி.

இரண்டாயிரத்து ஐந்நூறு பிரதிகள் அச்சடிக்கப்பட்ட முதல் குமுதம் இத ழின் ஆயிரத்து ஐந்நூறு பிரதிகள் திரு ம்பி வந்து போதும் நீங்கள் திகைத்து விடவில்லை.

புரிகிறது; ஒவ்வொரு விருட்சமும் ஒரு விதைக்குள்ளிருந்துதான் வந்திருக்கிறது.

பாதை போட்டுக் கொண்டே பயணம் செய்யவும், பயணம் செய்து கொண்டே பாதை போடவும் உங் களால் முடிந்திருக்கி றது.

எப்படி வந்தது இந்தத் தெம்பு?

லயோலாக் கல்லூரி மாணவராய் இருந்தபோது 'உல்ஸ்லி' காரில் வந்து கொண்டே நீங்கள் அதிகம் படித்தது, 'கார்னிஜி'யின் வாழ்க்கையில் முன்னேறு வது எப்படியல்லவா?

கல்வியை வாழ்க்கைப்படுத்தினீர்கள்.

உங்களிடம் நான் கற்றுக்கொள்ள



நினைப்பது உங்கள் நிதானம்.

பூகம்பம் வந்தால்கூட வீட்டைப் பூட்டிவிட்டு வெளியேறும் நிதானம் உங்கள் நிதானம்.

உங்களோடு எனக்கிருந்த இரண்டு சந் திப்பிலும் நான்தான் பேசிக் கொண்டி ருந்தேன்; நீங்கள் அதிகம் பேசவில்லை.

அலைகள் அடித்து விட்டுப் போக ட்டுமே! பாறை பதிலா சொல்லப் போகி றது?

நீங்கள் பாறை?

ஞானப் பாறை.

இரண்டு நாட்களுக்கு முன்பு என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டீர்கள்.

அசை போட, அசை போட ரசமாய் இருக்கிறது அந்த ரகசிய நினைவு.

ஒரு பூங்காவில்- சூரியன் கொட் டாவி விடத் தொடங்கும் ஓர் அந்திப் பொழுதில் நான் பறவைகளின் சந்த த்திற்குப் பாட்டெழுதிக் கொண்டி ருந்தேன்....

(தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

785

## வைஜெயந்தி எடுத்த முடிபு



...உடனே வைஜெயந்தி 'அப்பா! திருமணம் என்பது ஒரு ஆயுட்கால பந்தம்! திருமணம் செய்து கொள்பவர்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்ட பின்னர் வாழ்க்கையில் சேர்ந்தால், வாழ்வு சிறப்பாக அமையும். ஒரு கணநேரம் மட்டுமே ஒருவரைப் பார்த்துவிட்டு, அவரை மணம் புரிந்து கொள்ள நான் சம்மதிக்க மாட்டேன்" என்றாள்.

மறுநாள் காலை, வைஜெயந்தியின் தோழி ஒருத்தி ஓடோடி வந்து அவளிடம், "இளவரசி! உங்களைப் பார்க்க விஜயனின் பாட்டி வந்து இருக்கிறாள்" என்றதுமே, பரபரப்படைந்த வைஜெயந்தி பாட்டியை உடனே உள்ளே வர அனுமதித்தாள். தலைவிரி கோலமாகப் பதற்றத்துடன் வந்த பாட்டியைப் பார்த்ததுமே, வைஜெயந்திக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன ஆயிற்று பாட்டி? விஜயன் நலம்தானே?" என்று படபடப்புடன் கேட்டாள். அதற்குக் கிழவி கூறிய பதில் அவளை திடுக்கிடச் செய்தது. இளவரசன் ஜெயந்தன் முந்தைய தினத்தன்று தன்னுடைய ஆட்களுடன் ராஜேஸ்வரி கோயிலுக்கு வந்து இருந்தவன். தாகமாக இருக்கிறது என்று தண்ணீர் கேட்டு விஜயனின் வீட்டிற்கு வந்தான். அங்கு வைஜெயந்தியின் தத்ரூபமான பளிங்குச் சிலையைக் கண்டதும், அவனுக்கு பயங்கரக் கோபம் உண்டாகி விட்டது.

நான் மணந்து கொள்ளப் போகும இளவரசியை சிலை வடித்தது யார்?" என்று அவன் கோபத்துடன் கேட்க, விஜயன் தான் செதுக்கியதாகக் கூறினான். "அட அயோக்கியா? என்னுடைய வருங்கால மனைவியை சிலை வடிக்க உனக்கு என்ன தைரியம்?" என்று கூச்சல் இட்டான். ஆனால் விஜயன் இளவரசியின் விருப்பத்தின் பேரிலே தான் சிலை



செய்தேன் என்ற உண்மையைக் கூறாமல் மௌனமாக இருந்தான்.

"இப்படிக் கேட்டால் பதில் சொல்ல மாட்டான்!" என்று சீறிய ஜெயந்தன், தன் ஆட்களைக் கூப்பிட்டு, விஜயனை சாட்டையால் அடிக்க உத்தர விட்டான். அவன் உடல் முழுதும் ரணமாகி, இரத்தம் சிந்திய போதும் அவன் தப்பித்தவறிக்கூட வைஜெயந்தியைக் காட்டிக் கொடுக்கவில்லை. கோபம் தலைக்கேறிய யெந்தன், அந்தப் பளிங்குச்சிலையையே உடைத்து நொறுக்கித் தள்ளினான். அதன்பிறகு "இவனை இவன் வீட்டிலேயே சிறை வைத்து காவல் இருங்கள்! உண்மையைச் சொல்லும் வரை, இவனைப் பட்டினி போடுங்கள்!" என்று கூறிவிட்டு ஜெயந்தன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

மேற்கூறிய நிகழ்ச்சியைக் கூறிவிட்டு, கிழவி விம்மி விம்மி அழுது கொண்டே விஜயனைக் காப்பாற்றுமாறு வைஜெயந்தியைக் கெஞ்சினாள். அந்த சமயம் மன்னர் அங்குவர, நடந்த விடயங்களை வைஜெயந்தி தன் தந்தைக்கு விளக்கிக் கூறினாள். (தொடரும்)

04.2014
23

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1635 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரசுப் பள்ளி, பொஸ்டன் இலத்தீன் பள்ளி, மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1639 - புனித ஜார்ஜ் கோட்டை மதராசில் கட்டப்பட்டது.
- 1660 - சுவீடன் மற்றும் போலந்து ஆகியவற்றிற்கிடையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டது.
- 1867 - சக்கரம் ஒன்றில் படங்களைச் செருகி தொடர் படமாகக் காட்டக்கூடிய சோயிட்ரோப் (zoet-rope) என்ற கருவிக்கான காப்புரிமத்தை வில்லியம் லிங்கன் என்பவர் பெற்றார்.
- 1896 - நியூயோர்க் நகரில் உள்ள புகழ் பெற்ற கோஸடர் அண்ட் பயால்ஸ் மண்டபத்தில் (Koster and Bial's Music Hall) "வாட்வில்லி" குழுவினரால் "இரண்டு அழகிகள் குடை நாட்டியம் ஆடுவது" போன்ற காட்சி காண்பிக்கப்பட்டது. இதுதான் விட்டாஸ்கோப் என்ற ஆரம்பகால திரைப்படம் காட்டும் கருவி மூலம் திரையில் காண்பிக்கப்பட்ட முதல் காட்சி ஆகும்.
- 1905 - யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலில் தானுந்து கொண்டுவரப்பட்டது.
- 1932 - நெதர்லாந்தில் 153-ஆண்டுகள் பழமையான டி ஆட்ரியான் என்ற காற்றாலை தீயில் எரிந்து அழிந்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் முப்படைகள் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் கிரேக்க மன்னர் இரண்டாம் ஜோர்ஜ் ஏதன்ஸ் நகரை விட்டு வெளியேறினார்
- 1948 - அரபு-இஸ்ரேல் போர், 1948: இஸ்ரேலின் முக்கிய துறைமுகம் ஹைஃபா பாலஸ்தீனர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.
- 1966 - முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நிறைவடைந்தது.
- 1982 - கொங்க் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1984 - எயிட்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1990 - நமீபியா ஐ.நா மற்றும் பொதுநலவாய நாடுகள் அமைப்புகளில் சேர்க்கப்பட்டது.
- 1993 - இந்திய அரசியல் கட்சி இந்திய தேசிய லீக் உருவானது.
- 1993 - எரித்தீரியாவில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் எதியோப்பியாவில் இருந்து பிரிவதற்கு எரித்திரியர்கள் பெருமளவில் ஆதரவாக வாக்களித்தனர்.

### பிறப்புகள்

- 1791 - ஜேம்ஸ் பியூக்கானன், ஐக்கிய அமெரிக்காவின் 15ஆவது ஜனாதிபதி (இ. 1868)
- 1858 - மாக்ஸ் பிளாங்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (இ. 1947)
- 1867 - ஜொகான்னெஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1928)
- 1897 - லெஸ்டர் பியர்சன், நோபல் பரிசு பெற்ற கனேடியப் பிரதமர் (இ. 1972)
- 1902 - ஹால்டோர் லாக்ஸ்னெஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ. 1998)
- 1935 - இ. முருகையன், ஈழத்துக் கவிஞர் (இ. 2009)
- **1938 - எஸ். ஜானகி, தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகி**

### இறப்புகள்

- 1616 - வில்லியம் ஷேக்ஸ்பியர், ஆங்கில நாடக எழுத்தாளர் (பி. 1564)
- 1951 - சார்ல்ஸ் டோவ்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1865)
- 1992 - சத்யஜித் ராய்; உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் (பி. 1921)
- 2007 - போரிஸ் யெல்ட்சின், முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி (பி. 1931)
- 2009 - ரூபராணி ஜோசப், இலங்கை மலையகப் பெண் எழுத்தாளர்

### சிறப்பு நாள்

- உலகப் புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்

### எஸ். ஜானகி



எஸ். ஜானகி ஏப்ரல் 23, 1938 ஆம் ஆண்டு ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் பள்ளபட்லா என்ற ஊரில் ராமமூர்த்தி - சத்தியவதி தம்பதிகளுக்கு தெலுங்கு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் இந்தியாவின் புகழ் பெற்ற திரைப்படப் பாடகி. இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி உட்பட பல இந்திய மொழிகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான பாடல்களைப் பாடியவர். பல பாடல்களைத் தாமே எழுதி, இசையமைத்துப் பாடியுள்ளார். நான்கு முறை தேசிய விருது பெற்றவர். 1957 ஆம் ஆண்டில் வெளிவந்த விதியின் விளையாட்டு என்ற படத்தில் இடம் பெற்ற பெண் என் ஆசை பாழானது ஏனோ என்ற பாடல் இவரது முதல் பாடல் ஆகும். அடுத்த நாளே அவருக்கு தெலுங்குப் படத்தில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து பல படங்களில் பாடும் வாய்ப்புக் கிட்டியது. 25 ஆண்டுகளில் தென்னிந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், கொங்கினி, துளு, சௌராஷ்டிரம், இந்தி, வங்காளம், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடினார்.


1992 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்திருந்தபோது இவருக்கு ஞானகான சரஸ்வதி என்ற பட்டம் வழங்கப்பட்டது. தமிழ், தெலுங்கு மொழிகளில் பல பக்திப்பாடல்களைத் தாமே எழுதி இசையமைத்துப் பாடியுள்ளார். மௌனப் போராட்டம் என்ற தெலுங்குப் படத்திற்கு முதன் முதலில் இசையமைத்திருக்கிறார்.

இவரது கணவர் காலஞ்சென்ற ராம் பிரசாத். அவர் தனது மகன் முரளி கிருஷ்ணாவுடன் சென்னையில் வாழ்ந்து வருகிறார். இவர் 1986 இல் தமிழ்நாடு அரசின் கலை மாமணி விருது. 2002 இல் கேரளா மாநில சிறப்பு விருது. நான்கு தடவைகள் சிறந்த பாடகிக்கான தேசிய விருது. 1980 இல் மலையாளப் படம் ஒன்றிற்கும், 1984 இல் தெலுங்குப் படம் ஒன்றிற்கும் தேசிய விருது. பதினான்குமுறை கேரள மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது. ஏழு தடவைகள் தமிழ்நாடு அரசின் சிறந்த பாடகிக்கான விருது. பத்து தடவைகள் ஆந்திர மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது என்று பல விருதுகளைப் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2014-14.05.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

**அதிகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அன்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மேட இராசி நேயர்களே!**

**ஆபரண சேர்க்கைக்கு அஸ்திபாரமிடும் நேரம்!**

## ஆபரண சேர்க்கைக்கு அஸ்திபாரமிடும் நேரம்!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அவரோடு சுகாதிபதி சந்திரன் கூடிச் சஞ்சரிக்கிறார். இந்த சந்திர மங்கள யோகத்தின் காரணமாக ஜய ஆண்டு சித்திரை மாதத் தொடக்கத்தில் ஜெயத்தைக் காணப் போகிறீர்கள். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக அமையும்.

உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படப்போகிறார்கள். 'வெற்றி' என்ற மூன்றெழுத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்று சென்ற ஆண்டில் நீங்கள் தீட்டிய திட்டம் இப்பொழுது வெற்றி பெறப் போகிறது. திருமண வாய்ப்புகளுக்காக ஏங்கிய இளம் உள்ளங்கள் மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சி காணப் போகிறார்கள்.

சந்திர மங்கள யோகத்தை மட்டுமல்லாமல் வக்ர நிவர்த்தியான குருவின் பரிபூரண பார்வையும் சப்தம ஸ்தானத்தில் பதிவதால் வரன்கள் வாயில் தேடி வந்து கொண்டே இருக்கும். எப்போதோ வந்து விலகிச் சென்ற வரன்கள் கூட இப்போது மறுபரிசீலனையில் மண வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வைக்கும் சூழ்நிலையில் கிரகங்களின் சஞ்சார நிலை உள்ளது.

வக்ரம் பெற்று சஞ்சரிக்கும் சனி பகவானை உச்ச சூரியன் பார்க்கிறார். பகை கிரகத்தின் பார்வை சனியின் மீது பதிவது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் ராசியைப் பொறுத்த வரை தொழில் மற்றும் லாப ஸ்தானாத்திற்கு அதிபதியானவர் சனிபகவான். எனவே தொழில் சீராக நடைபெறுவதில் இடையூறுகள் ஏதேனும் வந்து சேரலாம்.

குறிப்பாக வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். உங்கள் தொழிலையே உடனிருக்கும் வேறொருவர் செய்ய நினைப்பார். என்ன இருந்தாலும் ஏழாமிடத்தில் சனி இருக்கும் வரை இதே சூழ்நிலை தான். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. மேலதிகாரிகளின் கலக்கம் ஏற்படாதிருக்கப் பொறுப் புணர்ச்சியுடன் பணியாற்றுவது மிகவும் அவசியமாகும்.

### மேஷ புதனும், இடப புதனும்!

ஏப்ரல் 14ஆம் திகதி, அதாவது மாதத் தொடக்க நாளில் நீசம் பெற்ற புதன் உங்கள் ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 3, 6இற்கு அதிபதி உங்கள் ராசியில் சஞ்சரிக்கும்பொழுது கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் செயற்படுவதே நல்லது. குறிப்பாக புத்திர ஸ்தானாதிபதி சூரியன் அதோடு இணைந்து சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் விரயங்களும், பிரச்சினைகளும் உருவாகலாம். இதுபோன்ற காலங்களில் கல்வி நலன் கருதியோ, கல்யாண முயற்சி கருதியோ செலவிடலாம்.

மே 1 ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.


### மீன சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 28 ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறப் போகிறார். 2, 7இற்கு அதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். தன வரவு தாராளமாக வந்து சேரும். தன்னம்பிக்கையும், தைரியமும் கூடும். மனதில் நினைத்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். தொழில் துறையில் எதிர்பார்த்தபடியே நல்ல மாற்றங்கள் உருவாகும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும். மே 10இல் செவ்வாய் வக்ர நிவர்த்திக்குப் பிறகு மேலும் நன்மைகளைக் கொண்டு வந்து சேர்க்கும். இம்மாதம் ஆனைமுகப் பெருமானை வழிபட்டு ஆனந்தத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தங்கை, தம்பிகளின் பாச மழையில் நனைவீர்கள். உங்கள் உடன்பிறப்புகளின் இல்லத் திருமண விழாக்கள் அல்லது இனிய சுபகாரியங்கள் உங்களால் முடிவடைந்து பாராட்டப் பெறுவீர்கள். இனிய வாழ்விற்கு அடித்தளமிட இதுவரை நீங்கள் காட்டிய பொறுமைக்கு இப்போது வெற்றி கிட்டும். வருமானம் திருப்தி தரும். சேமிப்பைக் கொண்டு தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்ய முன்வருவீர்கள். செவ்வாய் வக்ர நிவர்த்திக்குப் பிறகு ஆரோக்கியம் சீராகும். ஆதாயமும் அதிகரிக்கும். முருகப் பெருமானையும், துர்க்கையையும் வழிபட்டு முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்!**

**லட்சத்திற்கு மயங்காமல் லட்சியத்தை கடைப்பிடிக்கும் இடப இராசி நேயர்களே!**

**பண நெருக்கடி தீர்ந்து பணம் கிடைக்கும் நேரம்!**

## பண நெருக்கடி தீர்ந்து பலன் கிடைக்கும் நேரம்!

சித்தரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் பத்தாமிடத்தில் சஞ்சரித்து முத்தான வாழ்க்கையை முத்திரை பதிக்கும் விதத்தில் அமைத்துக் கொடுக்கப் போகிறார். பொதுவாக ராசிநாதன் பலம் பெற்றிருக்கும் நேரத்தில் எதையும் துணிந்து செய்யலாம். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர்.

குறிப்பாக விரயாதிபதி வக்ரம் பெறுவது யோகம் தான். அதே நேரத்தில் அவரோடு இணைந்து சகாய ஸ்தானாதிபதி சந்திரனும் இணைந்திருப்பதால் நினைத்த நேரத்தில் நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள்.

எனவே. இம்மாதம் சேமிப்பு கரையாமல் தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். பூமி வாங்குவது முதல் புதிய ஒப்பந்தங்கள் செய்து கொள்வது வரை ஒவ்வொன்றாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

வக்ர சனியின் இயக்கம் மட்டும் வளர்ச்சியில் கொஞ்சம் தளர்ச்சியை உருவாக்கலாம். உங்கள் ராசி அடிப்படையில் பார்க்கும்பொழுது 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது. பெற்றோரின் பிரியம் குறையலாம். பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு மறையலாம்.

வெற்றிக் கனியை எட்டிப்பிடித்து தொழிலில் கூட்டாளிகளின் மூலம் நற்பலன் பெறும் நேரத்தில் திடீர் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை அரவணைத்துச் செல்வது நல்லது. என்ன இருந்தாலும் இம்மாதம் காக வாகனத்தானின் சன்னிதியில் கைகூப்பி தொழுது கவசம் பாடி வழிபட்டால் பையில் பணம் சேரும்.

### மேஷ புதனும், இடப புதனும்!

ஏப்ரல் 14 ஆம் திகதி புத்தாண்டு அன்றே தனாதிபதி புதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கு ஏப்ரல் கடைசி வரை இருக்கிறார். மே 1 ஆம் திகதி உங்கள் ராசியல் வந்து சஞ்சரிக்கப்போகிறார். தன பஞ்சமாதிபதியான புதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்பச் செலவுகள் கூடும். கொள்கைப்பிடிப்போடு செயற்பட இயலாது. பிள்ளைகள் நலன் கருதி பெரும் தொகை ஒன்றைச் செலவிடும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும்.

அதே நேரத்தில் தனாதிபதி உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். வளர்ச்சிக்கு வித்திட, நண்பர்கள் ஆலோசனைகளை வழங்குவர்.

### மீன சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 28 ஆம் திகதி மீன ராசியில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக மிகுந்த யோகம் உங்களுககு வந்து சேரும். குறிப்பாக வீடு கட்ட வேண்டும், பூமி வாங்க வேண்டுமென்று திட்டம் தீட்டியவர்களுக்கு எல்லாம் அனுகூலமான நேரமிது. பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். கடல் கடந்து வரும் செயதி காதினிக்க வைக்கும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தின் விளிம்பைத் தொடுவீர்கள். கடன் சுமை குறையும். அடகு வைதத நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலைகூட உருவாகலாம். இம்மாதம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். துன்பங்கள் விலகி ஓடும்.


### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

சுக்ர பலத்தால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். மக்கட் செல்வங்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திக் கொடுப்பீர்கள். தக்க தருணத்தில் உறவினர்கள் கைகொடுத்து உதவுவர். தகுதிக்கு மீறிய வரன் தானாகவே வந்து உங்கள் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்ள முன்வரலாம். உடல் ஆரோக்கியம் சீராகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். இனிய வாழ்வு அமைய லக்குமி வழிபாட்டையும், மாருதி வழிபாட்டையும் செய்யுங்கள். வக்ரச் சனியின் இயக்கம் மாறும் வரை அக்கறை செலுத்த வேண்டியது ஆஞ்சநேயர் வழிபாட்டில் தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தொழில் வளம் பெருகும். தொகை செலவிற்கேற்ப வந்து கொண்டேயிருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிபுக்கு வருகிறதா புலிவேட்டை?



விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்க முனைந்தவர்கள் என்று கூறப்பட்டு, நெடுங்கேணி காட்டுப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட மூவரினதும் மரணத்துடன், வடக்கில் தீவிரப்படுத்தப்பட்ட பாதுகாப்புக் கெடுபிடிகள் சற்றுத் தளரும் அறிகுறிகள் தென்படுகின்றன.

கடந்த மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவர்களைத் தேடும் நடவடிக்கைகளுக்குப் பின்னர், வடக்கிலும், கிழக்கிலும், கொழும்பிலும் வைத்துக் கைது செய்யப்பட்ட 67 பேரில், 23 பேர் இவர்களின் மரணத்திற்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதுவே, இந்தக் கெடுபிடிகள் சற்றுத் தளர்வதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளது.

மூவரையும் பிடிக்கும் நடவடிக்கையைக் காரணம் காட்டி கைது செய்யப்பட்ட 23 பேர் எந்தக் குற்றச்சாட்டுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளதானது, அவர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் மீள உயிர் கொடுப்பதாகக் கூறப்பட்ட நடவடிக்கைகளுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனாலும், அவர்கள் பல வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டு, துன்புறுத்தல்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இவர்கள் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்தால், அரசாங்கம் நிச்சயமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு நசுக்க முயன்றிருக்கும்.

இவர்கள் அத்தகைய தொடர்புகள் ஏதுமற்றவர்கள் என்பது மூவரினதும் மரணத்திற்குப் பின்னர் எவ்வாறு உறுதியானது என்பதும் தெரியவில்லை.

ஒருவேளை கைது செய்யப்பட்ட 67 பேரில் மீதமுள்ளவர்களும் படிப்படியாக விடுதலையாகும் வாய்ப்புகள் உள்ளன.

கோபி, அப்பன், தேவிதன் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மீள உயிர் கொடுக்க முயன்றதாக கூறப்பட்ட விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் அரசாங்கத்திற்கு வந்துவிட்டது என்பதை இப்போது உணர முடிகிறது.

விடுதலைப் புலிகளை வேட்டையாடும் நடவடிக்கையை நீண்ட காலத்துக்கு இழுத்துச் செல்வது அரசாங்கத்துக்கு ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதால், வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் அந்த விவகாரத்திற்கு முடிபு கட்டப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை வேட்டையாடும் இந்த நடவடிக்கையே உண்மையானதுதானா என்ற கேள்வி எல்லாத் தரப்புகளிடமும் உள்ளன.

ஏனென்றால், வடக்கு, கிழக்கில் உள்ள படையினரின் உன்னிப்பான கண்காணிப்பு வலயம், புலனாய்வு வலையமைப்பு என்பனவற்றின் மத்தியில் இன்னொரு போரைத் துவக்கும் துணிச்சல் எவருக்கும் வந்திருக்க முடியாது.

அவ்வாறு துணிச்சல் கொண்ட எவருமே, ஒரு குறுகிய காலத்திற்குள் தம்மை அழிவுக்குட்படுத்திக் கொள்ளும் வழிகளைத் தேடியிருக்க மாட்டார்கள்.

விடுதலைப்புலிகளுக்கு மீள உயிர் கொடுக்க முயன்ற விவகாரத்தில் அரசாங்கத் தரப்பில் வெளியிடப்பட்ட தகவல்கள் அனைத்துமே சந்தேகங்கள், கேள்விகள் நிறைந்ததாகவே இருந்துள்ளன.

அதனால்தான், இது அரச தரப்பின் ஒரு நாடகம் என்று தமிழர் தரப்புகளில் மட்டுமன்றி, தெற்கிலுள்ள சில ஊடகங்களும் நம்புகின்றன.

புலனாய்வு நடவடிக்கைகளில் கைதேர்ந்த அரசாங்கம் ஒன்று, தம்மீது ஏற்படும் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு இதுபோன்ற கதைகளை வைத்து நாடகங்களை அரங்கேற்றுவது வரலாற்றில் புதியதல்ல.

அரசாங்கத்தின் நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அல்லது அதன் கொள்கையை நியாயப்படுத்திக் கொள்வதற்கு அல்லது வேறேதும் இலக்கை அடைவதற்கு இத்தகைய உத்திகள் கையாளப்படுவதுண்டு.

இலங்கைப் புலனாய்வு அமைப்புகள், விடுதலைப் புலிகளின் வலையமைப்புகளைத் தோற்கடிக்க, கடந்த ஒரு தசாப்த காலத்தில் பல நாடகங்களை அரங்கேற்றியுள்ளன.

அத்தகைய நாடகங்கள் உள்நாட்டில் மட்டும் நடக்கவில்லை. வெளிநாடுகளிலும் நடந்தேறியுள்ளன.

இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு வலுவான புலனாய்வு வலையமைப்பைக் கொண்டுள்ள ஒன்று என்பதை எவரும் மறுக்க முடியாது.

இலங்கையின் இந்தப் புலனாய்வுப் போருக்கு முன்னால் நின்று பிடிப்பது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியமில்லை.

ஜெனிவாவில் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொண்ட சூழலில்தான், விடுதலைப் புலிகளுக்கு மீள உயிர் கொடுக்க முயற்சிக்கப்படுவதான தேடுதல்கள் தொடக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கும் மேலாக அது தொடர்ந்து இடம்பெற்றது.

நெடுங்கேணிக் காட்டில் கடந்த 11 ஆம் திகதி இந்த மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்க முனைந்த முயற்சிகளை முற்றாகவே முறியடித்துவிட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை மலேசியாவில் நடந்த ஆசிய பாதுகாப்புச் சேவைகள் 2014 கருத்தரங்கில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச இலங்கையில் பயங்கரவாதம் இல்லை என்பதை தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

எனவே, இந்த மூவரினது மரணத்துடன் இந்த விவகாரம் அல்லது இந்த நாடகம் முடிபுக்கு வந்துவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

அதன் அறிகுறியாகவே 23 பேர் விடுவிக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும் விடுதலைப்புலிகளை வேட்டையாடும் இந்த நடவடிக்கையையோ அல்லது நாடகத்தையோ நீடித்துச் செல்ல இடமளிக்க முடியாத கட்டாயம் ஒன்று அரசாங்கத்திற்கு இருந்தது.

ஏற்கனவே மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள அரசாங்கம், தொடர்ச்சியாக கைதுகள், கெடுபிடிகள் என்று நீடித்துச் செல்வது இன்னும் அதிக குற்றச்சாட்டுக்களுக்கே வழிவகுக்கும்.

மீண்டும் விடுதலைப்புலி என்று கூறிக்கொண்டு கெடுபிடிகளை மேற்கொள்வதால், போருக்குப் பின்னர் அமைதியை ஏற்படுத்திவிட்டோம் என்று உலகில் ஏற்படுத்திய இமேஜ் அரசாங்கமே உடைத்துக் கொள்வதாகிவிடும்.

போருக்குப் பிந்திய நல்லிணக்கத்தை உருவாக்க அரசாங்கம் தவறிவிட்டதான குற்றச்சாட்டுக்கள் வலுவடைந்துள்ள சூழலில் அதனை உருவாக்குவதற்காக சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில், இனங்களுக்கிடையில் இடைவெளியை அதிகரித்துக்கொள்ள இடமளிக்க முடியாது.

எப்படியும் நல்லிணக்க முனைப்புகளுக்கு ஆதரவளித்தாக வேண்டிய நிலை உள்ளதால் சுமுகமான சூழலை உருவாக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு உள்ளது. எனவே, இந்த விவகாரத்துக்கு எப்படியும் குறுகிய காலத்திற்குள் முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

இதை இப்படியே நீடித்துச் செல்லவிட்டால், வளர்ந்து வரும் இலங்கையின் சுற்றுலாத் தொழில் உள்ளிட்ட பொருளாதார வாய்ப்புகள் அனைத்துமே பாதிக்கப்படும்.

எனவே, தான் திட்டமிட்ட இலக்கை அடைந்தவுடன், அரசாங்கம் இந்த விவகாரத்தை முடித்து வைக்க முடிபு செய்துவிட்டது.

சுமார் 5 வாரங்கள் நடத்தப்பட்ட இந்த நடவடிக்கையின் மூலமாக அரசாங்கம் பல அனுகூலங்களைச் சாதித்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

மூன்று பேரும் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், கண்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, வடக்கில் படையினர் நிலை கொண்டிருப்பது அவசியம் என்று ஜெனிவாவில் வலியுறுத்தியது நியாயமானதே என்பதை இந்தச் சம்பவம் நிரூபித்துள்ளது என்று கூறியிருந்தார்.

அதாவது வடக்கில் இனி படைக்குறைப்புக்கு இடமில்லை என்பதை அரசாங்கம், சர்வதேச சமூகத்துக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

முன்னுக்குப் பின் முரணான புள்ளிவிவரங்களைக் காட்டி வடக்கில் படைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக கூறச் சிரமப்பட்டு வந்த அரசாங்கத்துக்கு, இனி அத்தகைய புள்ளிவிவரக் கணக்குகள் ஏதும் குறிப்பிட்ட காலத்துக்குத் தேவைப்படாது. விடுதலைப் புலிகளுக்கு மீள உயிர் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டை வைத்து, புலம்பெயர் அமைப்புகள், நபர்கள் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தலில் இந்த விவகாரத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது.

ஆக, அரசாங்கம் தனது நிலைப்பாட்டையோ கொள்கையையோ வலுப்படுத்திக் கொள்வதற்கு இந்த 5 வார கால நடவடிக்கை பெரிதும் கைகொடுத்துள்ளது.

இனிமேலும் அது நீடித்தால் எதிர்மறையான விளைவுகளைக்கொண்டுவரும் என்று உணர்ந்த நிலையில் தான், அரசாங்கம் அதிலிருந்து பின்வாங்கத் தொடங்கியுள்ளது.

இந்த 5 வார கால நடவடிக்கை வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்திவிட்டது. அதுகூட, இன்னொரு போராட்டத்தை உருவாக்கும் துணிச்சலை எவருக்கும் உருவாக்கிவிடாது.

ஆனால், போர் முடிந்த பின்னர் ஒருசிறு மோதல் கூட நடக்கவில்லை என்று கடந்த 5 ஆண்டுகளாக அரசாங்கம் உருவாக்கிய ஒரு இமேஜ் மட்டும் இப்போது தகர்ந்து போய்விட்டது. அது அரசாங்கம் எதிர்கொள்ளும் முக்கியமான பாதகமான விளைவு என்பதில் சந்தேகமில்லை.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாணயங்கள் கடத்திய மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயங்களை இலங்கைக்கு கொண்டு வந்த மூன்று பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் இருந்து நேற்று முனதினம் இரவு இலங்கை வந்த மூன்று பெண்களே கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 83 இலட்சம் ரூபா மதிப்புள்ள வெளிநாட்டு நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட மூன்று பெண்களில் தாயும் இரண்டு மகள்மாரும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து 60ஆயிரம அமெரிக்க டொலர், ஆயிரத்து 405 சவுதி ரியால், ஆயிரத்து 200 யூரோ மீட்கப்பட்டதாக சுங்கப பிரிவின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார. (2)

## உயிர்களை தியாகம் செய்தே சமாதானத்தை அடைந்தோம்

### அமைச்சர் டிலான் பெரேரா

பொதுபல சேனாவுக்கு டொலர் மற்றும் பவுண்களில் நிதி கிடைத்து வருகிறது என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜாதிக பல சேனாவுக்கு மத்திய கிழக்கில் இருந்து தினார்களும், ரியால்களும் நிதியுதவியாக கிடைத்து வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் இந்த இரண்டு அமைப்புகளும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என பதுளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த இரண்டு அமைப்புகளும் தேசிய மற்றும் மத ஐக்கியத்தை சீர்குலைத்து வருகின்றன.

வெளிநாடுகளில் இருந்து நிதியை பெற்று வரும் இந்த அமைப்புகள் நாட்டின் வரலாற்றில் கிடைத்த உன்னத பௌத்த மதத்தை விற்று வருகின்றனர்.

பௌத்த மதத்தை திரிபுபடுத்தி தமது மடியை நிரப்பி கொள்கின்றனர். நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து மீட்க ஜனாதிபதி மேற்கொண்ட அர்ப்பணிப்பை நாங்கள் நன்கு அறிந்துள்ளோம்.

உயிர்களை தியாகம் செய்தே நாட்டுக்கு சமாதானத்தை கொண்டு வந்தோம் எனவும் அமைச்சர டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (2)

## நாட்டில் பாரியளவில் சமூக சீரழிவுகள் ஏற்பட்டுள்ளன

### ஜனாதிபதியிடம் சிறிவிமல தேரர் முறைப்பாடு

நாட்டில் பாரியள்வில் சமூக சீரழிவுகள் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், கட்டம்பே ரஜோபராமா விஹாரையின் மாநாயக்கத் தேரர் கெப்பட்டியாகொட சிறிவிமல தேரர் முறைப்பாடு செய்துள்ளார்.

நாட்டின் வேறு எந்தத் தலைவரினாலும் மேற்கொள்ளப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் முன்னொருபோதும் இல்லாத வகையில் நாட்டில் பாரியளவில் சமூக சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

ஆளும், எதிர்க்கட்சியினரின் ஊழல் மோசடிகளினால் நாட்டில் சீரழிவுகள் இடம்பெற்றுள்ளன.

அரசியல்வாதிகளுக்கு எவ்வித அடிப்படைத்தகைமையும் இல்லாமை பெரும் துர்ப்பாக்கிய நிலைமையேயாகும்.

பௌத்த சாசனத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியிருந்தார்.

இதேவேளை, மாநாயக்க தேரரின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு செயற்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உரிய தகுதியுடையவர்களை அரசியலில் ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய முயற்சிக்கப்படும்.

வேறு நாடுகளில் பட்டம் அல்லது முதுநிலைப்பட்டம் அரசியல்வாதிகளின் அடிப்படைத் தகுதி யாக காணப்படுகின்றது.

அரசியல் சாசன அடிப்படையில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் தீர்வு வழங்கப்பட முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (2)

## ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சாட்சியமளிக்கத்தயார்

### சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளின் போது சாட்சியமளிக்கத் தயார் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பிடகோட்டே பிரதேசத்தில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் அனைத்து பாதுகாப்புப் படையினரையும் பாதுகாக்கத் தயார எனவும் ஜனாதிபதியின் குடும்பத்தை பாதுகாக்கத் தயாரில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்ட ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக சாட்சியமளிக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது தாக்குதல் நடத்திய அம்பாந்தோட்டை மேயர் உள்ளிட்டவர்களை கைது செய்யுமாறு அவர் கோரியுள்ளார்.



ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப பேரவை அமர்வுகளைப் பயன்படுத்தி அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் அரசாங்கம் வெற்றியீட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், அடுத்து வரும் அமர்வுகளில் மேலும் நெருக்கடி நிலைமைகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## சிறைச்சாலை பாதுகாப்புக்காக துப்பாக்கிகள் கொள்வனவு

சிறைச்சாலைகள் பாதுகாப்புக்காக புதிய துப்பாக்கிகளை கொளவனவு செய்வதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

305 புதிய துப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு இவ்வாறு அனுமதி கிடைத்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திர சிறி பல்லேகம தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்கள பாதுகாப்புச் செயலாளரிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புதிய துப்பாக்கிகளை பெற்றுக் கொளவதற்கும் சகல சிறைசசாலைகளுக்கான் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான நடவடிக்கையை மேற்கொள்வதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (2)

## கருக்கலைப்பு சாதனங்களை களஞ்சியப்படுத்திய இருவர் கைது

தரம் குறைந்த கருக்கலைப்பு சாதனங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பாகிஸ்தானியர்கள் இருவர் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருக்கலைப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும் சாதனங்கள், சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் சாதனங்கள், அழகு சாதனப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

புறக்கோட்டை பங்க்சால் வீதியில் உள்ள விடுதியில் இந்தப் பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிய பிரஜைகள் மிக நீண்ட காலமாக பொருட்களை களஞ்சியப்படுத்தி, விற்பனை செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவு,குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் குறித்த பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பொருட்களுக்கு ஒட்டுவதற்கான போலியாக தயாரிக்கப்பட்ட காலாவதியாகும் திகதி அடங்கிய லேபள்கள் பலவும் இதன்போது மீட்கப்பட்டுள்ளன. (2)

## இன்று ஒரு தகவல்

### அர்ஜுனனுக்குத் தேரோட்டியவன்

''பார்த்தசாரதி'' என்றால் என்ன அர்த்தம்? பார்த்தனுக்கு சாரதி. அதாவது அர்ஜுனனுக்கு தேரோட்டியவன் என்பது பொருள்.

பார்த்தசாரதி என்றால் கண்ணனைக் குறிக்கிறது என்று நமக்குத் தெரியும்.

இந்த கண்ணன் அர்ஜுனனுக்கு இரண்டாவது பார்த்தசாரதிதான். அப்படிஅயன்றால், ''முதல் பார்த்தசாரதி'' என்று ஒருவர் உண்டா?

உண்டு!

கண்ணனுக்கு முன்பாகவே அர்ஜுனக்கு தேரோட்டியவன் உத்தரகுமாரன். அவன் விராம தேசத்து இளவரசன்.

பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த காலத்தில் அவர்கள் விராட தேசத்தில் தான் இருப்பார்கள் என்று துரியோதனன் ஊகிக்கிறான்.

அவர்களை வெளிப்படுத்துவதற்காக அவன் சில முயற்சிகளைச் செய்கிறான்.

தன்னுடைய சேனைகளையெல்லாம் அழைத்துக் கொண்டு போய், விராட தேசத்திலுள்ள பசுக்களையெல்லாம் ஓட்டிக் கொண்டு போகிறான். அந்த நேரத்தில் விராட மன்னன் வேறொரு திசையில் போர் புரியச் சென்றிருந்தான்.

அவனுடைய மகன் உத்தரகுமாரன் சரியான பயந்தாங்கொள்ளி.

கத்தியைப் பார்த்தாலே மிகவும் பயப்படுவான்.

இருந்தாலும் வேறு வழியில்லாமல் இவன் போர் முனைக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருந்தான்.

இந்த சமயத்தில் தான் அர்ஜுனன், உத்தரகுமாரனுக்கு உதவி செய்ய முன் வருகிறான்.

அதாவது, பேடி உருவத்தில் இருக்கும் அர்ஜுனன், உத்தரகுமாரனுக்குச் சாரதியாக அமைகிறார்.

போர் முனைக்குப் போய்ச் சேர்ந்ததும் உத்தரகுமாரன் தேரோட்டுகிறான். அர்ஜுனன் கௌரவ சேனைகளை விரட்டியடிக்கிறான். கௌரவர்கள் அனைவரும் புறமுதுகு காட்டி ஓடுகிறார்கள்.

அதன்பின் ஊருக்குத் திரும்பும் போது அர்ஜுனன் மறுபடியும் பேடி உருவம் எடுத்துக்கொண்டு தேரோட்டிக் கொண்டு வருகிறான். அப்போது உத்தரகுமாரன் தேரில் உட்கார்ந்திருக்கிறான்.

பார்ப்பவர்கள் அனைவரும், ''உத்தரகுமாரன் தான் கௌரவர்களை முறியடித்து விட்டு வருகிறான்'' என்று நினைத்து அவனைப் பாராட்டினார்கள்.

அர்ஜுனனும், ''நான் சண்டை போட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். இந்த இரகசியம் நமக்குள் இருக்கட்டும்'' என்று உத்தரகுமாரனிடம் கூறினான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்கும் உத்தர குமாரனுக்கு ''போரில் வெற்றி பெற்றான்'' என்ற பெரும் புகழும் எப்படி வந்தது?

''அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை'' என்று ஓர் ஆன்மீகப் பேச்சாளர் கூறினார்.

''ஸ்தானத்தின் மகிமை– அதாவது இடத்தின் மகிமை'' இங்கு எப்படி என்று கேட்டால்.

உத்தரகுமாரன் சிறிது நேரம் உட்கார்ந்து தேரோட்டினானே, அந்த இடத்தின் மகிமை தான் அவனுக்குப் பெருமையைச் சேர்த்துக் கொடுத்தது.

பிற்காலத்தில் ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்தப் போகும் இடம் அல்லவா? அந்த சாரதி ஸ்தானத்தில் உத்தரகுமாரன் முன்பே உட்கார்ந்தான். அதனால் அவனுக்கு அத்தனை பெருமை கிடைத்தது.

ஒரு நாற்காலிக்கு மதிப்பு அதில் உட்காருபவர்களைப் பொருத்துத்தான் ஏற்படுகிறது. ''இதோ இருக்கிறதே... இது இன்னார் உட்கார்ந்த நாற்காலி'' என்று இப்போதும் நாம் சொல்லிக் கொள்கிறோம் அல்லவா!

நாம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தால்... அந்த நாற்காலி, ஏற்கனவே வாங்கி வைத்திருக்கும் பெருமையைக் காப்பாற்றும் அளவுக்கு நாம் அதில் உட்கார வேண்டும். அதுதான் நமக்கும் நல்லது...நாற்காலிக்கும் நல்லது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு கடல் நீரேரியில் ஏற்பட்ட மீன்களின் பாரிய இறப்பு: ஓர் நோக்கு



பேராசிரியர்
திருமதி சிவசாந்தினி குகநாதன்,
தலைவர், மீன்பிடியியல் துறை,
யாழ் .பல்கலைக்கழகம்

தொண்டைமானாறு கடல் நீரேரியில் பெரும் எண்ணிக்கையில் மீன்கள் இறந்து மிதக்கின்றன எனும் செய்தி அனைவரையும் அதிரவைத்தது. சூரியன் இலங்கைக்கு மேல் உச்சம் கொள்வதால் வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் என ஊடகங்களில் செய்தி வெளியாகிக்கொண்டிருக்க கடும் வெப்பத்தைத் தாங்க முடி



யாது மக்கள் திண்டாடிக் கொண்டிருந்தனர். அத்தருணத்தில் மீன்களின் இறப்பு பற்றிய செய்தி மக்கள் மனதை உலுப்பியது. ஆம்! இலட்சக் கணக்கான மீன்கள் தொண்டைமானாறு பிரதான பாலத்துக்கும் வெளிக்கள நிலையத்துக்கு அருகாக உள்ள கடல் நீரேரிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இவ்வாறு இறந்து காணப்பட்டன.

மீன்கள் இறந்து மிதப்பதை அறிந்து யாழ் பல்கலைக்கழக மீன்பிடியியல் துறைத்தலைவர் திருமதி.சி.குகநாதன் ஆகிய நானும் இளைப்பாறிய பேராசிரியர் திரு க. சித்திரவடிவேலு மற்றும் சக விரிவுரையாளரான திருமதி சி. பிரதீபா, முதுதத்துவமாணி மாணவியான திருமதி ஆ. தர்மினியும் 19.04.2014 காலை 10 மணியளவில் அவ்விடத்துக்கு விரைந்து சென்று நீரின் தன்மை, மீன்களின் வகை மற்றும் அவ ற்றின் உடல் மாற்றங்களையும் ஆய்வு கருவிகளினால் பதிவு செய்யத் தொடங்கினோம். சுமாராக 4 மணித்தியாலங்கள் இவ் ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

தொண்டைமானாறு கடல் நீரேரியில் உவர் நீரை நன்னீராக்கும் திட்டம் 1943ம் ஆண்டு Webb என்பவரால் முன்வைக்கப்பட்டது. அத்திட்டத்துக்கமைய கோவிலின் பின்



புறமாக கடல் நீரை கடல் நீரேரிக்குள் போகாது தடுப்பதற்காக குறுக்கு அணை (barrage) ஒன்று அமைக்கப்பட்டது. அந்த barrage கடந்த காலச் சூழ்நிலைகளால் பழுதடைந்து அதன் வான்கதவுகள் திறந்த நிலையிலேயே காணப்பட்டன. இதனால் கடல் நீர் சரளமாக கடல் நீரேரிக்குள் சென்று கலக்கும விதத்தில் ஓர் நீரோட்டத்துக் கான சாத்தியம் அமைந்து காணப்பட்டது. தற்போது அந்த barrage திருத்தியமைக்கப்பட்டு அதன் வான் கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

கடல் நீர் கடல் நீரேரியினுள் உட்புக முடியாதவாறு பிரிக்கப்பட்டு விட்டது. எனவே வெளிக்கள நிலையத்தை அண்டிய உவர் நீர் பகுதி தனிமைப்படுத்தப்பட்டு விட்டது.

இருப்பினும் குறிப்பிட்ட காலப் பகுதியில் இக் கடல் நீரேரியினுள் இறால் குஞ்சுகள் பெருகும். முதிர்ந்த கடல் நீரில் வாழும் இறால் இனங்கள் கடல் நீரேரியினுள் வந்து முட்டையிட்டுச் செல்லும். முட்டைகள் பொரித்து குஞ்சாகி அதிகளவான இறால் குஞ்சுகள் வளரத் தொடங்கும். இவ் இறால் இனங்களைப் பிடிப்பதற்காக சிறியளவிலான மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் (small scale fishers) வான் கதவினை உடைத்து திறந்து விடுவது சகஜம். ஏழை மீனவர்களின் வாழ்வாதாரமாக இச்சிறிய இறால் பிடித்தொழில் அன்று முதல் இன்று வரை திகழ்ந்துவருகின்றது.

தற்போது அந்த barrage திறந்து விடாதபடி அவ்விடத்தில் ஒரு காவலாளி கடமையில் அமர்த்தப்பட்டுள்ளார். இருப்பினும் 2 வான் கதவுகள் தற்போது உடைக்கப்பட்டுள்ளன. உடைத்தவரின் நோக்கம் நிறைவேறாமல் உரிய திணைக்களம் மண்மூடைகளை அடுக்கி உப்புநீர் உள்வருவதை இடைநிறுத்தியுள்ளது. இந்த நிலைமையிலேயே சூழல் வெப்பநிலை அதிகரிக்க இந்த மீன்களின் இறப்பும் நிகழ்ந்துள்ளது. இம்முறை 2013ம் ஆண்டு இறுதியில் மழைவீழ்ச்சி மிக மிகக் குறைவு. இதனால் கடல் நீரேரியில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்தே காணப்பட்டது. மேலும் வான் கதவுகள் மூடப்பட்டதால் இரண்டும் கெட்ட நிலை நன்னீர் தேக்கமும் இல்லை கடல் நீரோட்டமும் இல்லை.

இந்நிலையில் ஏப்ரல் 17ஆம் திகதி சூரியன் உச்சத்துக்கு வந்தமையால் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பு அந்தச் சூழல் தொகுதியை வெகுவாகப் பாதித்துள்ளது. பெருமளவில் நீர் ஆவியாகிச் செல்ல உவர்நீரில் கரைத்துள்ள உப்புகளின் செறிவு அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு உவர்நீரில் ஒட்சிசன் கரையும் திறனைக் குறைத்துள்ளது. நீரோட்டமும் இல்லை வளிமண்டல ஒட்சிசன் கரையும் தன்மையும் இல்லை. எனவே உவர் நீரேரியில் உவர் தன்மை என்றுமில்லாதவாறு ஏப்ரல் 18, 19ம் திகதிகளில் ஆழம் கூடிய பகுதிகளில் 45 ppt யாகவும் கரையில் 90 ppt யாகவும் அதிகரிக்க, ஒட்சிசன் செறிவு சடுதியாகக் பூச்சியம் mg/l ஆக குறைய மீன்கள் உயிர்வாழ முடியாததொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரண நிலைமைகளில் தொண்டைமானாறு கடல்நீரேரியின் உவர்ப்புத்தன்மை (salinity) 14.4 தொடக்கம் 20 ppt வரையும் மாறுபட்டு காணப்படும் ஒட்சிசன் ($O_2$) செறிவு 9-16 mg/l ஆகவும் காணப்படும் அத்துடன் அதிக உயிர் பல்வகைமையை (Biodiversity) உடைய கடல்நீரேரியாகும்

இத்தருணத்தில் தொண்டைமானாறு கடல் நீரேரி வற்றிவிட்டதென்றே கூறலாம். இந்நிலையில் முதலில் இறந்து மிதக்கத் தொடங்கியது திரளி மீனினங்கள் ஆகும். இவை பரந்த உவர்ப்பு தன்மை வீச்சைத் தாங்க முடியாதவை, அடுத்தபடியாக விலாங்கு, கீளி, கெளிறு மற்றும் அனைத்து மீனினங்களும் இறக்கத் தொடங்கின. கெளிறு மீன்கள் ஓரளவு பரந்த உவர்ப்புத்தன்மை வீச்சைத் தாங்க கூடியன. விலாங்கு மீனினங்களும் அவ்வாறே. எனினும் அம் மீன்கள் கூட சுவாசிப்பதற்கு ஒட்சிசன் இல்லாததால் நீரின் மேற்பரப்புக்கு வந்து சுவாசிப்பதை நேரில்



அவதானிக்கக் கூடியதாக இருந்தது. விலாங்கு மீனினங்கள் சேற்றுநிலப்பரப்பில் செங்குத்தான நிலையில் நிமிர்ந்து காணப்பட்டன. இவை அனைத்தும் ஒட்சிசன் பற்றாக்குறையினாலேயே இம் மீன்கள் இறக்க நேரிட்டது என்பதற்கு சான்று பகர்கின்றன.

இறந்த மீனினங்களை யாழ் பல்கலைக்கழக மீன்பிடியியல் துறை ஆய்வுகூடத்தில் மீன் பிடியியல் விஞ்ஞான விசேட பிரிவில் கற்கும் நான்காம் வருட மாணவர்கள் பரிசோதித்து பார்த்த போது ஒட்சிசன் பற்றாக்குறையால் இறந்தமைக்கான சில முக்கியமான அக, வெளித் தோற்றங்களை அவதானிக்க முடிந்தது. அவை யாவன: வாய் திறந்த நிலை, இளகிய தோல், வெடித்துச்சிதறிய காற்றுப்பை, வெளிறிய தசை, கண்கள் வெளியில் வந்த நிலை, வெளிறிய பூக்கள் என்பனவாகும்

இறந்தழுகிய மீன்களை அகற்றி அவ்விடத்தைத் துப்புரவு செய்வதில் வல்வெட்டித்துறை நகர சபை தலைவரின் கண்காணிப்பில் நகர சபை ஊழியர்கள் பெரும் பங்காற்றிக் கொண்டிருந்தனர். மீன்கள் கூடைகளிலும் கட்டுமரங்களினாலும் அள்ளி எடுக்கப்பட்டு சிறிய லொறிகளில் ஏற்றி வீதியின் மறுகரையிலுள்ள பாரிய குழி ஒன்றினுள் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கடல்நீரேரியின் அடித்தளம் முருகைக்கற்பாறைகளால் ஆக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது

முருகைக்கற்பாறைகளின் ஒன்றிய வாழியாக அல்காக்கள் காணப்படுவது வழமை. அல்காக்கள் வெப்ப நிலைக்கு உணர்திறனுடையவை. வெப்பநிலை அதிகரிப்பால் இவை இறந்துவிட்டன. கடும் வெப்பநிலை, மழையின்மை போன்ற தொடர் நிலைமைகளால் உயிர்வாழ் முரு கைக்கற்களும் இறக்க நேரிட்டது. கடல்நீரேரியின் அடியில் பாசிகள் அனைத்தும் வாடி வறண்டு காணப்பட்டன.

இவ் அல்காக்களும் பாசிகளும் சூழல் தொகுதியின் சமநிலையில் பெரும் பங்காற்றுகின்றன. இவை பகலில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி உணவு தயாரிக்கும் போது வெளிவிடப்படும் ஒட்சிசன் மீன்கள் சுவாசிப்பதற்கு மூலாதாரமாக விளங்கும். இன்றைய நிலையில் தாவரங்களில் இருந்து வரும் அந்த ஒட்சிசன் கூட மீன்களுக்கு கிடைக்காத நிலை. இது சூழல் சமநிலைக்கு எவ்வாறு தாவரங்களும் விலங்குகளும் முக்கியம் என்பதை விளக்குகிறது.

மேலும் கூறினால் முருகைக் கற்பாறையான அடித்தளம் வெப்பநிலை கூடும்போது (35p C இலும் அதிகரிக்கும் போது) இறக்கத் தொடங்குகிறது. கடும் வறட்சியை தொடர்ந்து அவ்விடத்தில் உப்புச் சதுப்பு நிலம் (salt marshes) உருவாகத் தொடங்கியுள்ளது. அறுகம்புல்லும் (*Cyanodon*), உப்புச் சதுப்பு நிலத்தாவரமான *Suaeda* உம் மட்டுமே அந்த வற்றிய கடல் நீரேரியின் அடிப்பகுதியில் காணப்பட்டன.

கடல் நீரேரிகளில் வறட்சி ஏற்படும்போது Salt marshes உருவாகும். பின்பு உவர் நீர் மூடும் போது



அவை கண்டல் தாவரத்தால் (mangroves) ஆல் பிரதி செய்யப்படும். வறண்ட நிலைமையில் Salt marsh தாவரங்களுடன் ஓர் வட்டவுரு மாற்றத்தில் அறுகம்புல் தாவரமானது உருவாகுவது வழக்கம். வற்றிய பகுதிக்கும் நீர்ப்பகுதிக்கும் இடைப்பட்ட விளிம்பில் சிறிய தானியம் போன்ற 2–3 இலைகளை உடைய தாவரம் - common duck weed (*Lemna*). இறந்த நிலையில் காணப்பட்டது.

மீன்களின் இறப்பு எதிர்பாராத விதமாக சடுதியாக நடந்த போதிலும் குடாநாட்டு மக்களின் நன்னீர் தேவையை கருத்தில் கொண்டு தூர நோக்குடன்சிந்திக்கும்போது இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவங்கள் இயற்கையின் நியதியால் நிகழ்வது தடுக்க முடியாததொன்றாகும்.

சிறு இழப்புகளையும் பிரச்சினைகளையும் எதிர் நோக்கினாலும் நீண்ட காலத்தில் இதனை நன்னீர் திட்டமாக மாற்றினால் யாழ் குடாநாட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை தவிர்க்கலாம் எனும் தூர நோக்குச் சிந்தனையில் பெறுமதி மிக்க ஓர் திட்டமாக அமைகிறது.

இவ்வாறான ஓர் திட்டத்தை அமுல்படுத்தும் போது மாற்று வாழ்வாதார (Alternative live hood) முறைகளை மீனவ குடும்பங்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது அவர்களது வாழ்வில் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதில் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மேலும் பாக்கு நீரிணையிலிருந்து தொண்டைமானாறு கடல் நீரேரியினுள் வரும் உவர்நீர் அவ்விடத்தில் காணப்படும் பிரதான பாலத்தின் கீழாகவே ஊடுபுக விடப்படுகின்றது. இப்பாலம் தற்போது ஆசிய அபிவிருந்தி வங்கியின நிதியுதவியுடன் முற்றாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்நன்னீராக்கும் திட்டத்திற்கு அமைய தொண்டைமானாறு கடல் நீரேரியினஇருமுனையிலும்(ஒன்றுதொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயிலின் பின்புறமும் மற்றையது நாவற்குழியிலும்) barrage அமைக்கப்பட்டு கடல் நீரேரியின் நீரை கடலுடன் தொடர்புபடவிடாமல் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திருத்த வேலைகள் இடம் பெறும் போது பாலத்தின் கீழ் குவிக்கப்பட்ட மண் கும்பியில் ஒரு பகுதி அகற்றப்பட்டும் மற்றொரு பகுதி அகற்றப் படாமலும் காணப்படுகின்றது.

எனவே கடல் நீரானது ஏரியினுள் வரும் அளவு சடுதியாக குறைக்கப்பட்டுள்ளது எனலாம். இம்மண்கும்பியை அகற்றுவதில் பொறுப்பான அதிகாரிகளின் கவனம் விரும்பத்தக்க விடயமாகும். இவ்வாறு பிரிக்கப்பட்ட நிலையும் மழையில்லா நிலையும் தொடருமானால் barrage இனுள் மறுபக்கத்திலுள்ள நீரேரியில் காணப்படும் மீன்களினதும் மற்றும் உயிரங்கிகளினதும் சமநிலையும் குழப்பப்படும். எனவே அப்பகுதியில் தொடர்ச்சியான அவதானமும் ஆராய்ச்சியும் அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி இந்திய நாணயங்கள் இலங்கை ஊடாக கடத்தல்

இலங்கை ஊடாகவே போலியான இந்திய நாணயங்கள் பாகிஸ்தானுக்கு கடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புலனாய்வு அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலியான இந்திய நாணயங்கள் சீனாவில் அச்சிடப்படுகின்றன.

அங்கிருந்து கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரகத்துக்கு எடுத்து வரப்பட்டு, அரச பொதியின் ஊடாக பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பாகிஸ்தானில் இருந்து இந்திய எல்லைப் பகுதிகளின் ஊடாக போலி நாணயங்கள் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஒன்றிணைந்த இலங்கைக்குள் தீர்வை பெற்றுக்கொள்ளத் தயார்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு மேலும் கால அவகாசம் உள்ளதாகவும் ஒன்றிணைந்த இலங்கையினுள் தீர்வை பெற்றுக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்குவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.

எனினும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான எந்தவொரு திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் இதன் காரணமாகவே சர்வதேசத்தை நாட வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வுகாணும் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் மீண்டும் பங்கெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க் கடசிகளுக்கு சபை தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அழைப்பு விடுத்துள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச மத்தியஸ்தம் அநாவசியமானது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (2)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளான நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5மணிவரைஅடியார்கள்எண்ணெய்க் காப்பு சாத்தலாம் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி

மீசாலை மேற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கணபதிப்பிள்ளை சறோஜினிதேவி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Thun ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சறோஜினி தேவி கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு Krematorium Stadt, Schonaustrasse 23, 3600 Thun என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி கார்த்தி செல்வநாச்சி

முல்லைத்தீவு கொக்கிளாயைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி செல்வநாச்சி கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக் கிழமை நடைபெற்று பூதவுடல் வற்றாப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னையா சிவஞானசுந்தரம்

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியா உக்குளான்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவஞானசுந்தரம் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வவுனியா தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முருகேசு திருநாவுக்கரசு

வேலணை கிழக்கு மணியகாரர் வீட்டடியைப் பிறப்பிடமாகவும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு திருநாவுக்கரசு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வைத்திலிங்கம் முருகதாசன்

வங்களாலேன் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் முருகதாசன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.



### செல்வதுரை இந்திரராஜா

உரும்பிராயைச் சேர்ந்த செல்வதுரை இந்திரராஜா (வைத்திய கலாநிதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பொன்னையா அன்ரன் செசிலியம்மா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதி, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அன்ரன் செசிலியம்மா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 2 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

# கசினோ சூதாட்ட சட்டமூலத்திற்கு அரச பங்காளிக்கட்சிகள் கடும் எதிர்ப்பு

**(கொழும்பு) அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள கசினோ சூதாட்ட சட்டமூலத்தை முழுமையாக எதிர்ப்பதாக அரசாங்கப் பங்காளிக் கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தெரிவித்துள்ளன.**

பௌத்த தர்மத்தையும் மூவின சமூக ஒற்றுமையினையும் சீர்குலைக்கும் வகையில் சட்டமியற்ற அனுமதிக்கப் போவதில்லை எனவும் அரசாங்கப் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை தெரிவித்துள்ளன.

நாளைய தினம் அரசாங்கத்தினால் பாராளுமன்றில் கொண்டு வரப்படவுள்ள சட்ட மூலம் தொடர்பில் வினவிய போதே அக்கட்சியின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அர சாங்க பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அமைச் சர் சம்பிக ரணவக்க தெரிவிக்கையில்,

நாட்டிற்கும் பௌத்த தர்மத்திற்கும் எதிராக அரசாங்கத்தினால் ஏதேனும் சட்ட மூலங்கள் கொண்டு வரப்படுமாயின் அதனை ஒரு போதும் நாம் ஆதரிக்க மாட்டோம்.

கடந்த காலங்களிலும் அரசாங்கத்தின் இவ்வாறான விரோதச் செயல்களுக்கு எமது எதிர்ப்பினைத் தெரிவித்தோம். அதேபோல் பல செயற்பாடுகளை தடுத்து நிறுத்தியுள்ளோம். எனவே, அதேபோன்றொரு நிலைமைதான் இப்போதும் ஏற்பட்டுள்ளது.

அதி நவீன ஹோட்டல் வசதிகள் உருவாக்கப்படுவதற்கும் நாட்டில் உள்ள சகல துறையினையும் வசப்படுத்தும் எந்த செயற்பாடுகளுக்கும் நாம் ஒருபோதும் தடையாக செயற்பட்டதில்லை.

ஆனால், இச் சட்ட மூலங்களினூடாக கசினோ சூதாட் டததினையும் விபச்சாரம், போதை[illegible] பாவனையையும் [illegible] வகையில் அரசாங்கம் செயற்படுமாயின் அதற்கு எமது எதிர்ப்பினையே தெரிவிப்போம்.

அரசாங்கத்தில் நாம் இணைந்து செயற்படுவதனால் அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் ஆதரிப்போம் என்று நினைப்பது தவறானதாகும். நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் நாம் செயற்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மற்றுமொரு அர சாங்கக் கூட்டுக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவிக் கையில்,

கசினோ சூதாட்ட சட்ட மூலம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை ஒருபோதும் நாம் ஆதரிக்கப் போவதில்லை. [illegible] பௌத்த மதம் கூட இவ்வாறான மோசமான செயற்பாடுகளை முழுமையாக எதிர்க்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கம் ஒருபோதும் இதனை அமுல்படுத்த முயலக்கூடாது. முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களின் மத விடயங்களிலும் சமூக ஒற்றுமையினை கட்டியெழுப்பும் செயற்பாடுகளிலும் தடைகளை ஏற்படுத்தும் பேரினவாத மத அமைப்புகளும் கட்சிகளும் கசினோ சூதாட்ட விடயத்தில் மௌனம் காப்பது வேடிக்கையானதொரு விடயமாகும்.

பௌத்த மதத்தை சீரழிக்கும் வகையில் பௌத்த அரசினால் ஒரு சட்ட மூலம் கொண்டுவரப்படுகின்றமைக்கு அனைவரும் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும்.

எனவே, பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் இச்சூதாட்ட சட்ட மூலத்திற்கு நாம் எமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவர் ஜோன் அமரதுங்க கருத்து தெரிவிக்கையில்,

இச்சட்ட மூலம் தொடர்பில் நாம் எப்போதும் ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளோம்.

அப்போதும் சரி இப்போதும் சரி நாம் கசினோ சூதாட்ட சட்ட மூலத்திற்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றோம்.

மூவின சமூகத்தினையும் சீரழிக்கும் வகையில் அரசாங்கம் திட்டமிட்டு இவ்வாறான செயற்பாடுகளை செய்து வருகின்றது.

தமது தனிப்பட்ட விருப்பங்களுக்காகவும் தமது பண ஆசைக்காகவும் அரசாங்கம் இந்த நாட்டை சீரழிக்கின்றது.

இதை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.

நாளைய தினம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் இச் சட்டமூலத்தினை எதிர்ப்போம் எனவும் அவர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற மக்களுக்கு ஆர்வமில்லையாம்; ஒருங்கிணைப்பு கூட்டத்தில் நேற்று பரபரப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற ஆர்வம் காட்டவில்லை என்று மாவட்ட அரசாங்க அதிபர் கூறிய கருத்து ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்டனத்திற்கும் உள்ளானார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத்தலைமையில் ஆரம்பமானது.

இதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி. சிவஞானம் சிறிதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன். ஏம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபைத்தலைவர்கள் திணைக்களத்தலைவர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான திருமதி றூபவதி கேதீஸ்வரன் வரவேற்புரையினையாற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதனையடுத்து இணைத்தலைவர் உரையினை ஆற்றிய முதலமைச்சர் கூறுகையில்,

அரசாங்கமானது வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது அரச வளங்களையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற்று விட பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அரசு அதில் படுதோல்வியடைந்தது. அதேவேளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு பூரண ஆதரவை வழங்கியிருந்தனர்.

வடக்கு மாகாணசபையிலுள்ள 38 உறுப்பினர்களில் 30 பேர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து மக்கள் தெரிவுசெய்து மாகாணசபைக்கு அனுப்பிவைத்தனர். இந்தத்தேர்தலில் தோற்றுப்போன அரசாங்கம் வடக்கு மாகாணசபைக்கு 13 ஆவது திருத்த சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூட வழங்க முன்வரவில்லை என்று அரசாங்கத்கீத கடுமையாக சாடியிருந்தார்.

**சர்ச்சையை ஏற்படுத்திய அரச அதிபர்**

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் அரசாங்க அதிபரினால் பல்லூடகத்தில் காண்பிக்கப்பட்ட தரவுகளில் மீள்குடியேற்றம் குறித்து சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் புள்ளிவிபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டபோது குறுக்கிட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள் குடியேற்றம செய்யப்பட்டதாக காண்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மக்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அப்படியானால் அந்த மக்களுக்கு என்ன நடந்தது என்று கேள்வியெழுப்பினார். இதற்கு பதிலளித்த அரசாங்க அதிபர், யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

ஆனால் இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களில் பலர் தற்போது நாட்டில் இல்லை. இந்தியாவில் முகாம்களில் பல மக்கள் உள்ளனர். அதுமட்டுமின்றி நண்பர்கள் உறவினர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த இந்த மாவட்டத்தை சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடிறே ஆர்வம் இன்றியுள்ளனர். மக்கள் மீள்குடியேற ஆர்வம் காட்டாதநிலையில் மக்களை மீள்குடியேற்றுவது எவ்வாறு என்று பதிலுக்கு அவரும் கேள்வியெழுப்பினார்.

இதன்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட இரணைதீவு பகுதியில் மக்கள் மீள்குடியேற முன்வந்த போதும் அதற்கான நடவடிக்கையினை இன்னும் மாவட்ட செயலகம் எடுக்கவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை இதற்கு என்ன காரணம் என்று த.தே.கூ. கேள்வியெழுப்பியபோது,

இரணைதீவைப்பொறுத்தவரை அங்கு மக்கள் மீள்குடியேறுவதற்கு அக்கறை காட்டவில்லை.அதேவேளை வேறு இடங்களில் அவர்கள் சகல வசதிகளுடனும் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அதுமட்டுமின்றி இந்தப்பகுதியிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் இந்தியாவின் தமிழகத்திலுள்ள அகதிமுகாம் களிலும் நண்பர்கள் உறவினர்களின் வீடு களிலும் வாழ்ந்துவருகின்றனர். இதனால் அவர்களைப் பற்றி நாம் கணக்கெடுப்பதில் அக்கறை காட்டவில்லை என்று மறுபடியும் கூறினார்.

இதனையடுத்து மாவட்ட அரசாங்க அதிபரின் இந்தக்கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வாதிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள், மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையில் அரசஅதிகாரிகள் அக்கறை காட்டவில்லை. மாறாக மக்கள் மீள்குடியேற விரும்பவில்லை என்று கூறி தப்பிக்கப்பார்க்கின்றனர்.

இது முற்றிலும் தவறான கருத்து. எனவே மக்களின் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்த அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளும் முன்வர வேண்டும் என்று கூறினார்.

**மௌனமாயிருந்த முதல்வர்.**

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திற்கான இணைத்தலைமையை ஜனாதிபதி வழங்கி தமிழ்மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்த அதேவேளை கடந்த முறை இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை புறக்கணித்தும் இருந்தனர்.

ஆனால் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரோ இணைத்தலைவர் என்ற பதவிநிலைக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் கூட்டத்தை நடத்துவதற்கு விட்டுவிட்டு மேடையில் மௌனமாக இருந்தார்.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்தக்கூட்டத்தில் இணைத்தலைவர் உரையினை ஆற்றிய பின்பு பிற்பகல் 2 மணியளவில் அடுத்தமாதம் 31 ஆம் திகதி வரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இக்கூட்டம் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்படும் வரை மௌனமாகவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இக்கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டம் குறித்து எதுவுமே பேசப்படவில்லை. இதேவேளை நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்த பல விடயங்கள் ஆராயப்படாமலே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்படாமலே ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


—எஸ்.ஆர்.கரன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் குற்றியும் அரிசி ஆனால் சரி
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தேவகுருவும் அசுரகுருவும் ஒரே வீட்டில் இருந்தால்

தேவகுரு வியாழன். அசுர குரு சுக்கிரன். இருவரும் பகை கொண்டவர்கள். பகை கொண்டவர்கள் என்பது மட்டுமல்ல; இருவரும் பலமானவர்கள். பலமானவர்களோடு பகைப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதால், தேவகுருவுக்கும் அசுர குருவுக்கும் சமத்துவமான இடம் வழங்கப்பட வேண்டும் என்பது சோதிட நியதி.

தேவகுருவுக்கு முன்னுரிமை வழங்கி அசுர குருவை ஓரங்கட்ட நினைத்தால், சுக்கிராச்சாரியார் சரியான நேரத்தில் காலை வாரி விடுவார்.

மாறாக அசுர குருவுக்கு முதல் மரியாதை செலுத்தி தேவகுருவைப் புறந்தள்ளினால் முதலாம், மூன்றாம் இடங்களில் சஞ்சரிக்கும் போது குரு பகவான் தான் யார் என்பதைக் காட்டி விடுவார்.

எனவே, முரண்பட்ட இருவரை எவ்வாறு சமாளிப்பது என்பதில்தான் ஜாதககாரரின் வெற்றி தங்கியுள்ளது.

இங்கு நாம் பார்த்தது தேவகுரு, அசுரகுரு என்ற இருவரும் வெவ்வேறு இடங்களில் இருக்கின்ற நிலைகளையாம்.

இப்போது தேவகுருவும் அசுரகுருவும் ஒரே வீட்டில் இருந்தால் இருவரையும் எவ்வாறு சமாளிப்பது? இருவரையும் சமாளித்து நல்ல பலனைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு? என்பது குறித்து நோக்குவது பொருத்துடையது.

பகைப்பட்ட இருதரப்பும் ஒரே வீட்டில் இருப்பது பகையை மேலும் அதிகரிக்கும் என்று ஒரு சாரார் கூறலாம்.

இன்னுமொரு சாராரோ இரண்டு பகைக் கிரகங்களும் ஒரே வீட்டில் இருந்தால் அவை ஜாதககாரனுக்கு கடும் நன்மை செய்யும் என்றும் வாதிடலாம்.

இங்கு தேவகுருவும் அசுரகுருவும் ஒருவருக்கு ஒருவர் பகைப்பட்டவர்களாக இருந்தாலும் ஜாதககாரனுக்கு பகைப்பட்டவர்களா? என்று ஆராய்ந்தால்,

ஒரே வீட்டில் இருக்கக் கூடிய தேவகுரு, அசுர குரு ஆகிய இருவரையும் ஜாதககாரன் எங்ஙனம் போசிக்கின்றான் என்பதைப் பொறுத்தே நன்மை தீமையை அளவிடமுடியும்.

அதாவது ஜாதககாரன் தேவகுருவையும் அசுரகுருவையும் சமமாகக் கருதி உரிய பூமாலை சூடி இருவருக்கும் அபிஷேகம் பண்ணினால் தேவகுருவும் சுக்கிராச்சாரியாரும் மகா நன்மை செய்வர்.

சில வேளைகளில் தேவ, அசுர குருமார் ஜாதககாரருக்கு (பொது) நன்மை பயக்கக் கூடிய விடயங்களில் ஒற்றுமைப்பட்டு செயற்படவும் கூடும்.

அதேசமயம் ஜாதககாரன் ஒரு பக்கம் சார்ந்து நின்றால், பகைப்பட்டவர்கள் மேலும் பகை கொள்வர் என்பதுடன் ஒருவர் நன்மை செய்ய மற்றவர் அதனைத் தடுக்க, ஜாதககாரன் இந்த ஜென்மத்தில் மீளமுடியாமல் போகும்.

எனவே ஜாதக அமைப்பு என்பது ஏற்புடையதா? என்பதற்கு நம்மால் பதிலளிக்க முடியாவிட்டாலும் ஜாதக அமைப்பும் அதில் கூறப்பட்ட தோஷ பரிகாரண நிவர்த்திகளும் மிகச் சிறந்த முகாமைத்துவ எண்ணக்கருக்களை கொண்டவை என்பதை மட்டும் நம்மால் அறுதியிட்டுக் கூற முடியும்.

ஆக தேவகுரு, அசுரகுரு என்ற சோதிட வகைமைப்படுத்தலில் இருவரும் பகைமைப் பட்டவர்களாயினும் நீவிர் பக்க சார்பற்று நடந்து நன்மை பெறுவீராக. மற்றவர்களுக்கும் நன்மை செய்ய உதவுவீராக. உன்னுடைய நலனுக்காக- உன்னுடைய விருப்பிற்காக உண்மை, நியாயம் என்பதை மறைத்து விடாதே என்பது தான் ஜாதககாரனுக்கு சோதிடம் கூறும் புத்திமதி.

இந்தப் புத்திமதியைப் பொருத்தமான இடங்களில் பொருத்திப் பாருங்கள். பல நன்மைகள் நம்மூடாகவே நம்மை வந்தடையும்.

# இலங்கை தமிழர் பிரச்சினையில் காங்கிரஸை நம்பமுடியவில்லை

## தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத்தமிழர்விவகாரத்தில்காங்கிரஸ் கட்சியை நம்ப முடியவில்லை என்று திமுக தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் பல்வேறு அமைப்புகள் ஆதரவு தெரிவித்தன. எம்ஜிஆர் ஆதரவு தெரிவித்தார். பின் திமுகவும் ஆதரவு தெரிவித்தது.

இலங்கையைத் தொடர்ந்து, தமிழகத்திலும் விடுதலைப்புலிகள் பலம் பெற்றனர். இப்போது முதல்வர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் போலவும், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அக்கறை உள்ளவர் போலவும் பேசி வருகிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை இராணுவம் கைது செய்து, இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சட்டப் பேரவையில் ஜெயலலிதாதான் தீர்மானம் நிறைவேற்றினார்.

இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்றபோது, போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்றும் ஜெயலலிதா கூறினார்.

போரில், பொதுமக்களைக் கேடயமாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்றும் ஜெயலலிதா கூறினார். இப்படி விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவும் செயறபட்ட ஜெயலலிதா, அவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார். இதை தமிழகத்தில் உள்ள சிலரும் நம்புகின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் பிரபாகரன் மற்றும் எண்ண ற்ற தமிழர்கள் மாண்டு விட்டனர். அதற்குப் பிறகாவது இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஓர் விடிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக நாம் போராடி வருகிறோம்.

டெசோ அமைப்பு மூலம் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, உலக அரங்கில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அழுத்தம் கொடுத்து வருகிறோம். காங்கிரஸ் அரசாவது அவர்களைக் காப்பாற்றும் என்று நினைத்தோம்.

ஆனால், காங்கிரஸூம் கைவிட்டு விட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியையும் நம்ப முடியவில்லை. அதன் காரணமாகவே காங்கிரஸ் கூட்டணியிலிருந்து விலகினோம். எனவே, சிறு பதவிகளைப் பெறுவதற்காக இந்தத் தேர்தலில் திமுக போட்டியிடவில்லை. இலங்கைத் தமிழர்களின் நலன்களைக்காக்கவே இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம் என்றார். (2)

# ஸ்ரீ சோமாஸ்கந்தவின் கட்டடத் திறப்பு விழா

## அமைச்சர் பந்துல பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் புதிய கட்டடங்களை திறந்து வைத்தலும் மாணவர்களிடம் கையளித்தலும் இன்று முற்பகல் 11 மணிக்கு கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன்தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன, சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண கல்வியமைச்சு செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# ஆடும் அருள் ஜோதி நாட்டிய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆளுநரின் ஏற்பாட்டில் ஆளுநர் செயலகத்தால் ஆடும் அருள் ஜோதி என்ற நாட்டிய நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் கல்லூரி வீதி, நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் சிங்கப்பூர் மற்றும் இந்திய வாத்தியக் கலைஞர்களுடன் இணைந்து நம்நாட்டு கலைஞன் மோகனப்பிரியன் தவராசா நடனத்தை ஆற்றுகை செய்யவுள்ளார்.

ஆடும் அருள் ஜோதியைத் தேடி ஆராய்ந்து இறை அன்பிலும் அதனூடாக அசைவும் இசைவும் பெறும் இறை நடனத்தில் இரண்டறக் கலப்பதற்காக ஆலயங்களில் வீற்றிருக்கும் தெய்வங்களின் அழகு கண்டு அருள் பெற்ற அனுபவமே இந்த ஆடும் அருள் ஜோதி ஆகும்.

இந்நாட்டியப் படைப்பு ஆலய வீதிகளில் ஆடி வரும் தேரினில் பவனி வரும் இறைவனின் அழகில் மனதைப் பறிகொடுத்த பக்தர்கள் பெற்ற அனுபவமாகும்.

சிங்கப்பூர், அவுஸ்திரேலியா எனப்பல நாடுகளில் ஆற்றுகை செய்யப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்ற இந்நட [illegible] ரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (அ)

# அரசாங்கத்தை வழிநடத்த சிறந்த எதிர்க்கட்சி அவசியம்

## ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பங்காளியாகவும் அமைச்சர்களாகவும் இருந்து கொண்டு அரசாங்கத்திற்கே குழி பறிக்கும் அமைச்சர்கள் தொடர்பில் அரசாங்கம் விழிப்பாக செயற்பட வேண்டும். அதே வேளை அது தொடர்பில் கூடிய அவதானம் செலுத்தவும் வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வணக்கத்திற்குரிய ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிட்டியாவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசில் அங்கம் வகித்துக்கொண்டு அரசாங்கத்திற்கே குழி தோண்டுவோருக்கு உதாரணமாக அமைச்சர் ரிசாட் பதியூதீனைக் குறிப்பிடலாம்.

நாட்டிலே முஸ்லிம் அடிப்படைவாதத்தை பரப்புவதற்கு அவசியமான முயற்சிகள் பல கோணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு இடமளிக்க முடியாது. இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் தனது முழுமையான கவனத்தை செலுத்த வேண்டும்.

ஒரு நாட்டில் அரசாங்கத்தை வழிநடத்த நல்லதொரு எதிர்க்கட்சி அவசியமாகும். துரதிர்ஷ்டவசமாக இன்று எமது நாட்டில் எதிர்க்கட்சியொன்று இல்லாத நிலைவரத்தை நாம் காண்கின்றோம்.

எமது நாட்டில் எதிர்க்கட்சி செய்ய வேண்டிய முழுமையான பணியை ஊடகங்களே செய்து வருகின்றன. எனவே ஊடகங்கள் மக்களின் கௌரவத்தை பெற்று திகழ்கின்றன என்றார். (2)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## அகங்காரம் இருக்கும் வரை முக்தி இல்லை



✦ பாலும் நீரும் கலந்தது போன்றது உலகம். நீங்கள் ஓர் அன்னம் போன்று இருந்து, நீரைத் தவிர்த்து பாலைப் பருகுங்கள்.

✦ ஏகாந்தத்திலே (தனிமை) இருந்து நீங்கள் தியானம் புரியும்போது உங்கள் குடும்பத்தவரிடமிருந்து உங்களை முற்றிலும் பிரித்துக் கொண்டு தனித்திருங்கள்.

✦ இல்லறத்தாருக்கு ஜீவர்களிடத்து அன்பு, பக்தர்களுக்குச் சேவை கடவுளின் புனித நாம உச்சாடனம் ஆகியவை கடமைகளாகும்.

✦ பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும், கறியுமேயாகும். பணத்தையே உங்களுடைய உயிரும் உடலுமெனவோ, உங்களது ஒரே குறியும் நோக்கமும் எனவோ கருதாதீர்கள்.

✦ அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைகூடாது பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும் நீங்காது.

✦ இல்லறத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள். கடவுளை நம்பி இருங்கள் பின்னர் நீங்களாக எதையுமே செய்ய வேண்டியிராது. அன்னை காளி உங்கள் பொருட்டு யாவற்றையும் தாமே செய்வாள்.

✦ சம்சாரமாகிய பெருங்கடலில் ஆறு முதலைகள் உள்ளன. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பவையே அந்த முதலைகளாம்.

✦ பெண்ணாசையை ஒழித்தவன் உலகத்தையே துறந்தவன் ஆவான். அவனுக்கு இறைவன் வெகு அருகில் இருக்கிறார்.

✦ மாயை என்பது தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் முதலியவர்களிடம் ஒருவனுக்கு உண்டாகும் பாசமாகும். எல்லா உயிர்களிடமும் சமமாகப் பரவும் அன்புக்கு தயை என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு – III

# கிறாஸ் கொப்பர்ஸ் அணியை வீழ்த்தி மானிப்பாய் பரீஸ் காலுறுதிக்கு தெரிவு



காந்தசீலன்

**கிறாஸ் கொப்பர்ஸ் அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி 131 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.**

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு-III சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெறுவதற்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் யாழ்.நகரிலிருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்காக நடத்தி வரும் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் முதலாவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி கிறாஸ் கொப்பர்ஸ் அணியை 131 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 46.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 335 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் சபேஸன்-27, ஜெயதீபன்-19, சுபாதீஸ்-32, வினோத்-48, கோபிரசாத்-36, கிஸோ-32, நிதர்ஸன்-37, கரிகரன்-60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபிலன்-03, ராஜகாந்தன்-01, ரவிசங்கர்-02, மதுஸன்-01 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 39.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் டிலோஸன்-29, காந்தசீலன்-74, சரண்ராஜ்-33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாஸ்-03, கரிகரன்-02, விநோத்-01, சபேஸன்-01, பிரதீஸ்-01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற மானிப்பாய் பரீஸ் அணி, சிறிகாமாட்சி அணியுடன், சனிக்கிழமை நடைபெற இருக்கும் முதலாவது கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள். இப் போட்டியின் மூலம் சிறந்த கழக அணித் தெரிவுக்கு மானிப்பாய் பரீஸ் அணி 10.66 புள்ளிகளையும் கிறாஸ் கொப்பர்ஸ் அணி 3.04 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)





சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தால் சித்திரைப் பௌர்ணமியை முன்னிட்டு நடத்தப்பட்ட கலாசார விளையாட்டுப் போட்டியின் போது...

## கலக்க விரைவில் களமிறங்குவேன்

– கெவின் பீட்டர்சன்

காயம் காரணமாக டில்லி அணியின் அணித்தலைவர் கெவின் பீட்டர்சன் ஐ.பி.எல் போட்டியில் விளையாடாத நிலையில், அடுத்த போட்டியில் களமிறங்க போவதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



கடந்த இரு போட்டிகளில் காயம் காரணமாக கெவின் பீட்டர்சன் விளையாடாததால் ஐ.பி.எல் போட்டிகளில் டில்லி அணிக்கு பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த போட்டியில் விளையாட தயாராகி விடுவேன் என்று தெரிவித்த இங்கிலாந்து அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரரும், டில்லி டேர் டெவில்ஸ் அணியின் அணித்தலைவருமான கெவின் பீட்டர்ச்ன் கூறுகையில், நாங்கள் மூன்று போட்டிகளில் விளையாடி ஒரு போட்டியில் வென்றுள்ளோம்.

என்னை அவர்கள் இழந்துள்ளனரா? என் பது பற்றி எனக்கு தெரியாது. இது ஒரு நீண்ட தொடர். என்னை பொறுத்தவரை அடுத்த போட்டியில் அணிக்கு திரும்பிவிடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறியுள்ளார்.

(க)

## சண்டிலிப்பாய் பிரதேச இ.கழக வருடாந்த விளையாட்டு விழா

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த இளைஞர் விளையாட்டு விழா இடம்பெறவுள்ளது.

இதன் ஒரு அங்கமாக தடகள நிகழ்வுகள் இன்றும் நாளையும் மாலை 2.30 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.


இதில் இன்று புதன்கிழமை ஆண் பெண் இருபாலாருக்குமான தட்டெறிதல், குண்டு போடுதல், ஈட்டி எறிதல், முப்பாய்தல், நீளம்பாய்தல், உயரம் பாய்தல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை ஆண் பெண் இருபாலாருக்குமான சுவட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

எனவே சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் அனைவரையும் குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (க-23)

## அரியாலை ச.ச.நடத்திய மென்பந்தாட்டம்; குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்

அதிரடியான ஆட்டத்தினால் அரியாலை ஐக்கிய விளையாட்டு கழகத்தை வீழ்த்தி குருநகர் கார்மேல்போய்ஸ்அணி சம்பியனாகியது.



அரியாலை சனசமூக நிலையத்தினால் சித்திரை புத்தாண்டினை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் அரியாலை காசிப்பிள்ளை மைதானத்தில் நடைபெற்றது.

முதல் சுற்றில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அணியினையும் இரண்டாம் சுற்றில் குருநகர் சீ ஸ்டார் அணியினையும் அரை இறுதியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக (B) அணியினையும் வீழ்த்தி இறுதி சுற்றுக்கு முன்னேறியது.

இறுதி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழக (A) அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவுசெய்தது. அவ்வணி 5 பந்து பரிமாற்றத்தின் முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 31 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் அரியாலை மண்ணின் அதிரடி ஆட்டக்காரரான காண்டி ஒரு ஓட்டத்துடனும், கந்தான் 3 ஓட்டத்துடனும், சஞ்சயன் 3 ஓட்டத்துடனும், லிநோதன் 2 ஓட்டத்துடனும் உதயா 10ஓட்டத்துடனும், சதீஸ் 5 ஓட்டத்துடனும் தமது ஆட்டத்தை முடித்தனர். பந்து வீசில் றொக்சன் ஒரு பந்து பரிமாற்றத்தினை வீசி 6 ஓட்டங்களை வழங்கி 2 இலக்குகளையும், அஜன் 2 ஓட்டங்களை வழங்கி ஒரு இலக்கையும், அலன் (வையயா) 5 ஓட்டங்களை வழங்கி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

32 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி ஆரம்ப ஆட்டக்காரரின் இணைப்பான அதிரடியான ஆட்டத்தின் மூலம் 10பந்துகளில் 36 ஓட்டங்களை பெற்று வெற்றி கோப்பையை தன்வசமாகியது. இதில் அஜன் நான்கு 6 ஓட்டங்கள் அடங்கலாக 26 ஓட்டத்தினையும், அணித்தலைவர் செல்டன் ஒரு 6 ஓட்டங்கள் அடங்கலாக 10 ஓட்டத்தினை பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சஞ்சயன் ஒரு பந்து பரிமாற்றங்கள் வீசி 24 ஓட்டங்களையும், கந்தன் 4 பந்துகள் வீசி 13 ஓட்டங்களை வழங்கியிருந்தனர். இதன் மூலம் குருநகர் கார்மேல்போய்ஸ் சம்பியனாகியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குருநகர் கார்மேல்போய்ஸ் அணியின் அஜன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர் ஆட்ட நாயகனாகவும் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியின் அஜன் தெரிவு செய்யப்பட்டார். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் ஒரு...

ஒரு காலை இழந்த அங்கவீனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் கணினி நிலையமொன்றினை நடத்தி வருவதாகவும் அதனூடாக விடுதலைப்புலிகளின் இயக்கத்திற்கு ஆதரவான துண்டுப் பிரசுரங்களினை அச்சடித்து வந்ததாகவும் கூறியே ரி.ஐ.டியினர் அவரினை கைது செய்துள்ளனர்.

புலி இயக்கத்தில் இருந்த போது இவருக்கு சிலம்பரசன் எனும் பெயர் சூட்டப்பட்டிருந்ததாகவும் ரி.ஐ.டியினர் தரப்பில் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இவர் வவுனியாவிற்கு கொண்டு செய்யப்பட்டு தற்போது கொழும்பிற்கு மாற்றப்பட்டுள்ளார் என கூறப்படுகின்றது. (எ-4)

## அரசின் மீது...

திருச்செல்வம் ஆகியோரை விடுதலைப் புலிகளே படுகொலை செய்தனர்.

அதுபோலவே, ஜோசப் பரராஜசிங்கத்தையும், லசந்த விக்கிரமதுங்கவையும் இலங்கை அரசாங்கமே படுகொலை செய்தது என்று எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வேயின் அனுசரணையுடனான போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பில் நத்தார் ஆராதனையின்போது தேவாலயத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஹைதராபாத் அணியை வீழ்த்தி பஞ்சாப் ஹட்ரிக் வெற்றி

ஐ.பி.எல் சீசன் 7இன் 9-வது ஆட்டத்தில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 193 ஓட்டங்கள் எடுத்தது. அபாரமாக ஆடிய மக்ஸ்வெல் 95 ஓட்டங்களை குவித்தார்.





இதனையடுத்து 194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பஞ்சாப் அணியின் மக்ஸ்வெல் தெரிவானார். (க)




## ஜனாதிபதியின்...

அரசாங்கக் கொள்கைகளை எமது மக்கள் நிராகரித்து எமது கூட்டமைப்பின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் எழத்தேவையில்லை.

ஆனால் தேர்தலின் பின்னர் ஒரு சில வாரங்களினுள் மாகாண மக்கள் நலம் கருதாது ஆளும் கட்சி நலன் கருதியே நடவடிக்கைகளை எடுத்துச் செல்வது எம்மால் புரிந்து கொள்ளப்பட்டது. மத்திய அரசாங்க ஆளும் கட்சி தாம் தருவதை மாகாண மக்கள் ஏற்றே தீரவேண்டும் என்ற பாணியில்த்தான் நடவடிக்கைகள் எடுத்துச் செல்லப்படுவதை அவதானித்தோம்.

என்னை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு இணைத் தலைவராக தலைமை தாங்க வேண்டும் என்று ஜனாதிபதியால் அவரின் 18-ம் திகதி நவம்பர் ...தம் கொண்ட கடிதத்தால் நான் கேட்கப்பட்டிருந்தேன். அதன் பிரதி ஒன்றை இங்கு சமர்ப்பிக்கின்றேன். அக் கடிதத்தின்படி வருங்காலம் சம்பந்தமான மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறி என்னை அதனை நடைமுறைப்படுத்த உதவும் வகையில் இணைத் தலைவராக வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தேன்.

அப்படியிருந்தும் கூட அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைக்கலாம் என்ற எண்ணத்தில் இவ் வருடம் ஜனவரி 2-ம் திகதி மாண்புமிகு ஜனாதிபதி அவர்களைச் சென்று சந்தித்தேன் பல உறுதிப்பாடுகளை அவர் அத்தருணத்தில் தந்திருப்பினும் எதனையும் அவர் இன்று வரை நடைமுறைப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக மக்களின் ஜனநாயக உரிமைகளை மதியாமல் தொடர்ந்து மத்திய அரசாங்கக் கட்டமைப்புக்களே வட மாகாண நிர்வாகப் பரிபாலனத்தைக் கொண்டு நடத்தி வருகின்றன.

எமது மாகாண மக்கள் மற்றைய மாகாண மக்கள் போலல்ல. அவர்கள் போரின் உக்கிரத்தில் இருந்து விடுபட்டு வந்துள்ளார்கள். அவர்களின் பிரச்சினைகளும் தேவைகளும் விசேடமானதும் தனித்துவமானதுமாவன. எல்லோருக்கும் ஒரே அளவுப் பாதணிகள் பொருந்தும் என்று நினைப்பது முறையாகாது என்பதை அன்று ஜனாதிபதி அவர்களுக்கு எடுத்துக் காட்டினேன்.

வட கிழக்கு மக்களின் விடிவிற்காகத்தான் 13-வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதனை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் போய் எமக்குத் தந்துதவப் போன சமச்சீர்மையற்ற அதிகாரப் பகிர்வானது கவனத்திற்கு எடுக்கப்படாமல் போயுள்ளது.

தற்பொழுது மத்திய அரசாங்கத்தின் கீழ் சகல அதிகாரங்களையும் உள்ளிழுக்கவே நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தால் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதற்கு திவிநெகும சட்டம் ஒரு உதாரணம். மாகாண சபைகளின் சுதந்திரத்திலும் அதிகாரங்களிலும் கை வைப்பதாகவே மேற்படிச் சட்டம் அமைந்துள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட்டை இவ்வாறான எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே நாங்கள் காண்கின்றோம். மத்திய அரசாங்கத்தின் கை மாகாண சபையின் நடவடிக்கைகளில் மேலோங்கும் வண்ணமாகவே ஜனாதிபதி செயலணி, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. தேர்தலில் வாக்களித்த பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புக்களை சீரழிக்கும் வண்ணமாகவே செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால்தான் ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் நாங்கள் பங்குபற்றாது இருந்து வந்தோம். எனினும் எமது மக்களின் ஆக்ஞையை நாம் புறக்கணிக்கக் கூடாது. இதனால் எமது முடிவை மாற்றி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்குபற்ற முன்வந்துள்ளோம். எம் மக்களின் எதிர்பார்ப்புக்களை வீணடிக்காது எவ்வளவுதான் மத்திய அரசாங்கம் தனது முகவர்களின் ஊடாக வட மாகாண மக்களின் நலன்களுக்கு எதிராக நடக்க எத்தனிப்பினும் அவற்றை முறியடிப்பதற்கே நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். எனினும் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அரசாங்கம் நடந்து கொண்டால் அவற்றிற்கு உறுதுணையாக இயங்கவும் நாங்கள் பின்நிற்க மாட்டோம். எமது மக்களின் விமோசனமே எமக்கு முக்கியம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கூறினார். (எ-11)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அமரர்



### கந்தையா வேலுப்பிள்ளை

பிறப்பு
01.12.1944

இறப்பு
25.03.2014

அன்புடையீர்!

கடந்த 25.03.2014 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தை அமரர் கந்தையா வேலுப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 24.04.2014 வியாழக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து 12.30 மணிக்கு நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


அம்பன்,
குடத்தனை.

(சி-7132)

இங்ஙனம்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### சிவசண்முகவடிவேல்



எமது தேவஸ்தானத்தில் பல காலமாக பிரதம பௌராணிகராகவும் சிவத்தமிழ் விருது 2013-ல் பெற்றவருமாகிய "சைவத்திரு" சிவசண்முகவடிவேல் ஐயா சிவபதமடைந்ததை கேள்வியுற்ற எமது தேவஸ்தானம் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றது. அவரின் ஆத்மா சாந்தி அடைய அம்பாளின் திருவடியை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(சி-7128)

## கண்ணீர் அஞ்சலி

### பொன்னையா அன்ரன் செசிலியம்மா



முத்துமாரி நகைமாட உரிமையாளரின் தாயார் **பொன்னையா அன்ரன் செசிலியம்மா** 21.04.2014 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூட்டன் வைன் சொப்,
யாழ்ப்பாணம் (6206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O/L சித்தியில்லை, IELTS, நிதி நெருக்கடியால் உங்கள் வெளிநாட்டுக்கனவு தடைப்பட்டுள்ளதா?

3 மாதம் வெளிநாட்டில் தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்து
UK, New Zealand, Australia, Switzerland மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல புதிய வாய்ப்பு
முதல் 5 பேருக்கு விசா 100% இலவசம்
அனைத்துச் சேவைகளுக்கும் 3 வருட சேவை உத்தரவாதம்

FREE OFFER
அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால ENGLISH THE EASYWAY ஆங்கிலக் கற்கைநெறி முற்றிலும் இலவசம்

Sikaram | TakeOff
மேலதிக விபரங்களுக்கு: www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
(C-7133)

## இடம்பெயர்ந்த...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத்தலைமையில் ஆரம்பமானது. இதில் முதல் விடயமாக மீள்குடியேற்றம் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் பல்லூடகத்தின் துணையுடன் விளங்கப்படுத்தப்பட்டது. அதில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு இதுவரை 41 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 513 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் எனக் கூறினார்.

இதன் போது குறுக்கிட்ட

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை மாவட்ட அரசாங்க அதிபர் கூறியதுபடி 41 ஆயிரம் குடும்பங்களைச்சேர்ந்த மக்களே யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு மீள்குடியேற்றப் பட்டுள்ளனர். ஆனால் யுத்தத்திற்கு முன்னர் இங்கு பல இலட்சக்கணக் கான மக்கள் தங்கள் குடும்பங்களுடன் வாழ்ந்து வந்தனர். இதனை அரசாங்க திணைக்களத்தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன இந்நிலையில் மிகவும் சொற்பளவான குடும்பங்களே இங்கு மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். அப்படியானால் மிகுதி மக்களுக்கு என்ன நடந்தது? அந்த மக்கள் தொடர்பான கணக்கெடுப்பினை மாவட்ட அரசாங்க செயலகம் மேற்கொள்ளாதது ஏன்? என்றும் பல கேள்விகளையும் எழுப்பியிருந்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது குறுக்கிட்ட மாவட்ட அரசாங்க அதிபர், இராணுவத்தினர் கிராமங்களை ஆக்கிரமித்து வைத்துள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் ஆனால் இராணுவத்தினர் தமிழ்மக்களுக்கு சொந்தமான காணிகள் பலவற்றை கையப்படுத்தி வைத்திருப்பதை ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## புலிகள் நாட்டில்...

சாட்டுகளை சுமத்தி வடக்குத் தமிழர்களை கைதுசெய்யும் நடவடிக்கையை அரசு உடன் கைவிட வேண்டும். இல்லாவிட்டால், அதற்கு சர்வதேச ரீதியில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 64 வயது மூதாட்டி ஒருவர் புலிகளின் எதிர்கால பயன்பாட்டிற்காகக் காணியொன்றைக் கொள்வனவு செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டில் அவரைக் கைதுசெய்த பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர், அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுகுறித்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார் விக்கிரமபாகு கருணாரட்ன. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பில் ஐ.நாவில் மூன்றாவது முறையாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், புலி நாடகத்தை அரங்கேற்றி சர்வதேசத்தின் கவனத்தை திசைத்திருப்பிவிடலாம் என அரசு எண்ணிக் கொண்டிருக்கின்றது. இதற்காகத்தான் வடக்கிலுள்ள தமிழர்களை வயது வித்தியாசம் பாராமல் கைதுசெய்கின்றது.

அரசின் இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக 64 வயதுடைய மூதாட்டியையும் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புலிகளின் எதிர்கால தேவைக்காக காணியொன்றைக் கொள்வனவு செய்ததாக குற்றஞ்சாட்டியே பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் குறித்த மூதாட்டியைக் கைது செய்துள்ளனர். இவர் தனது வயிற்றில் இரண்டு குண்டுகளைக் கட்டிக்கொண்டிருந்தார் என அரசு கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

புலி இல்லாவிட்டால் இந்த அரசால் எதுவுமே செய்ய முடியாது. தற்போது சிங்கள மக்களிடத்தில் அரசின் ஆதரவு சரிந்து கொண்டு வருகிறது. அதைத் தக்கவைத்துக் கொள்ளத்தான் இந்தப் புலி நாடகத்தை அரசு அரங்கேற்றுகிறது. இது தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அரசுக்கு பிரச்சினைகளையே ஏற்படுத்தும் என்றார் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரம்பாகு கருணாரட்ன. (எ-11)

## புலிகளின் மீளி...

பரிமாறியுள்ளார் என்றும் இவர் புலிகளுக்காக வடக்கில் ஒரு காணியை வாங்கியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த மூதாட்டி மோசமான குற்றச் செயல் புரிந்துள்ளார் என்றும் அவரை தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தி ப்யங்கரவாதத்துடன் தொடர்புடைய தகவல்களை பெற்றுவருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் வடக்கில் இலங்கை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டவர்களின் சுமார் நாற்பதுபேர் வரையில் தொடர்ந்தும் சிறைவைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வடக்கில் புலிகள்...

சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் அனைத்துலக ரீதியில் தீவிரவாதிகளுக்கான ஆதரவைத் தேடுவதுடன் வடக்கில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளை வலுப்படுத்தும் செயற்பாட்டையும் செய்து வருகின்றனர்.

வடக்கில் வாழும் அனைவரும் விடுதலைப் புலிகளே. இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்டாலும் இவர்களின் கொள்கைகளையும் மனநிலையையும் மாற்ற முடியாது.

தீவிரவாதிகள் எப்போதும் தீவிரவாதிகளாகவே வாழ்வார்கள். அதன் வெளிப்பாடே இன்று மீண்டும் தலைதூக்கியுள்ளது.

அனைத்துலக அமைப்புக்களுடன் கைகோர்த்து விடுதலைப் புலிகள் இன்று வடக்கை சீரழிக்க ஆரம்பித்து விட்டனர். இதனை உடனடியாக கட்டுப்படுத்தி வடக்கு கிழக்கில் உருவாகி வரும் தீவிரவாதத்தை அழிக்க வேண்டும்.

மீண்டும் வடக்கில் இராணுவப் பாதுகாப்பை அதிகரித்து விடுதலைப் புலி தீவிர வாதிகளை கொன்று அழிக்க வேண்டும். இல்லையேல் ஒருபோதும் பயங்கரவாதத்தை அழிக்க முடியாது.

அனைத்துலக ஒத்துழைப்புடன் வடக்கில் உள்ள தீவிரவாதிகளையும் அவர்களுக்கு துணைபோகும் அனைத்து உறுப்பினர்களையும் கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## வடக்கு மாகா...

செய்யப்பட்டதன் பின்னர் மத்திய அரசோடு இணைந்து நடத்தும் முதலாவது கல்வி மாநாடு இதுவாகும்.

இம் மாநாட்டின் போது 10 குழுக்களின் விவாதங்கள் இடம்பெற்று அக்குழுக்களின் விவாதத்தின் முடிவின்படி அறிக்கையொன்றும் தயாரிக்கப்படவுள்ளது.

அவ்அறிக்கையின்படி வடக்கு மாகாண கல்வி நிலையில் 5 ஆண்டு கால கல்வித்திட்டம் உருவாக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண கல்வியமைச்சர் கு. குருகுலராஜா தெரிவித்தார். (எ-4)

கிளிநொச்சியில் ! 27th

INITIATE IT
இந்தியா மற்றும் யாழ்ப்பாண தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் நடாத்தபடும்
ஒரு நாள் சிறப்பு பயிற்சிநெறி
இன்றே பதிவுகளுக்கு முந்துங்கள்....!
பதிவுகளுக்கான இறுதித் திகதி 2014.04.26

MINUTE PATH
ONE DAY WORKSHOP

VIDEO EDITING
WEB DEVELOPMENT
GRAPHIC DESIGNING

From : 9.00AM to 5.00PM - 2014.04.27th
Fee : Rs. 1000/- Inclusive of Lunch & Refreshments
Venue : ESOFT Computer Studies - Kilinochchi
No. 01, Kanagapuram Road(Near old Market),Kilinochchi
Tel : 021 568 9444

பயிற்சி முடிவில் சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள்




ESOFT COMPUTER STUDIES
No. 01, Kanagapuram Road, Kilinochchi (Near Old Market)
Tel : 021 568 9444 / 021 228 5444 | Hotline : 077 55 888 95
Shaping Lives, Creating Futures.
www.esoft.lk
Isaland wide 50 Branches
(C-7127)

VACANCY

நீங்கள் O/L எழுதி முடித்தவரா? எமது நிறுவனத்தின் நிரந்தர வேலை வாய்ப்புக்கள் உள்ளன. தங்குமிடவசதி உண்டு. முன் வேலை அனுபவம் அவசியமற்றது.

* Supervisor * Asst. Manager
* Distributor * Manager

மேலே உள்ள தொழில்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு : 077 - 0771377, 077 - 6219536
(6202)

வாழ்க வளமுடன்

* கணக்காய்வு பரீட்சகர் சேவை தரம் II இற்கான ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2014
* மருத்துவவியல் தொழில் வல்லுநர் துணை மருத்துவ சேவை பயிலுநர் 2014 (A/L உயிரியல் பிரிவு)
* பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2014
* மொறட்டுவ பல்கலைக்கழகம் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி 2014-2015
* இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை 2014. தேசிய டிப்ளோமா கற்கைநெறி 2014 - 2017
* பெறுபேறு மீளாய்வு (சா.தர) 2013 ஆகிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும்
* S.சுரேஸ்குமார் BSc (Hons). MBA (Lon) இன் A/L Chemistry பல்தேர்வு வினாக்கள் விளக்கமான விடைகளுடன் கூடிய நூல்.
* மற்றும் சகல விதமான பாடப் பயிற்சிப் புத்தகங்களும் பாடசாலை உபகரணங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் (C-7117)

நியூ அருள்நாயகி புத்தக நிலையம்
கண்டி வீதி,கொடிகாமம்.
0775144093,0774937585

[illegible] வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org